வெற்றிமணி வெளியீடு 23

# சிவத் தமிழ்


Free Circulation

இலவசம்




சுவாமி விவேகானந்தர்
சிறப்பிதழ்

## உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உனக்குள்ளேயே உள்ளது



பிரதம ஆசிரியர்:
கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

2013



# அருள் ஓவியம்

நீ எதை நினைக்கின்றாயோ அதுவாக ஆகின்றாய் உன்னை வலிமை படைத்தவன் என்று நினைத்தால் வலிமைபடைத்தவன் ஆவாய்.

உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒரு போதும் நினைக்காதே.

நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம் கூட சக்தியற்றதாகி விடும்.

பலமே வாழ்வு பலவீனமே மரணம்.

கீழ்ப்படியக் கற்றுக் கொள் கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்தடையும்.

உற்சாகமாக இருக்கத் தொடங்குவதுதான் வெற்றிகரமான வாழ்க்கை வாழத் தொடங்குவதற்கான முதல் அறிகுறி.

அடிமைகளின் குணமாகிய பொறாமையை முதலில் அழித்துவிடு.

மிருக பலத்தால் அல்லாமல் ஆன்மீக பலத்தால் மட்டுமே எழுச்சி பெறமுடியும்.

அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும்.

உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

தனியாக இருக்கும் பொழுது நீங்கள் என்ன சிந்திக்கின்றீர்களோ அதுதான் உங்கள் வாழ்க்கையை மாற்றி அமைக்கும்.

உலகில் உள்ள தீமைகளைப் பற்றியே நாம் வருந்துகிறோம். நம் உள்ளத்தில் எழும் நச்சுஎண்ணங்களைப் பற்றி சிறிதும் கவலை கொள்வதில்லை. உள்ளத்தை ஒழுங்குபடுத்தினால் இந்த உலகமே ஒழுங்காகிவிடும்.

**சுவாமி. விவேகானந்தர்**

# சிவத் தமிழ்

**அன்பே சிவம்! சிவமே தமிழ்!!**

மலர் 8 2013 இதழ் 23



**ஆரம்பம்** 2004



பிரதம ஆசிரியர்
கலைஞானமணி
**கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்** B.F.A
Tel.02351 458862
e.mail. vettimaniy@hotmail.com

உதவி ஆசிரியர்
ஆன்மீகத்தென்றல்
**த.புவனேந்திரன்**

கௌரவ ஆசிரியர்
**கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்**
**திரு.பொ.கனகசபாபதி**
(முன்னாள் அதிபர் மகாஜனாக்கல்லூரி)
**இலக்கியச் செம்மல் இந்துமகேஷ்**

வெளியீடு
**Dr.M.K.S.Sivakumaran.B.F.A**
Brinker Höhe 13
58507 Lüdenscheid - Germany
Tel.02351 458862

கனடா
Dr.Kathir.Thuraisingam
31 Gennela Sqare
Toronto,On
M1B 5A3
Canada

இலங்கை
திருமதி.வலன்ரீனா இளங்கோவன்.M.A
தபால்பெட்டி ஒழுங்கை
பலாலிவீதி
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
யாழ்ப்பாணம்


# இனிய சங்கமம்



## நான் **ஓம்** என்றேன்.

அது ஒரு மின்னியல் சம்மந்தமான ஒரு தொழிற்சாலை. ஒரு காலத்தில் நீண்டவயர்களும் அதனைப் பொருத் தும் பெரிய பிளக்குகளுமாக வாயைப்பிளந்து கொண்டு நின்ற அந்த மின்னியல் பொருட்கள். இன்று அடக்க ஒடுக்கமாக ஒரு சிறிய முத்திரை அளவுக்குள் நித்திரை கொள்கின்றன.

வேண்டிய நேரம் அவை தமது பணியை நிறை வேற்றும். வயரையும் காணோம். அதனை உருவாக்க அங்கு எவரையும் காணோம். எல்லாம் ரோபோ மயம். இடை இடையே ஓரிருமனிதர்கள் சரியாக யாவும் நடை பெறுகிறதா என்பதனை அவதானிக்க அங்கு நின்றனர். சிரிப்பு என்னவென்றால்! அவர்களையும், அவதானிக் கவும்,அவர்களுக்கு மேலே ஒருவன் அவ தானித்துக் கொண்டு (கமரா) நிற்பதுதான்.

இவ்வளவு விஞ்ஞானம் தலைக்குமேல் வளர்ந்து விட்டதால் மனிதனுக்கு தலைக்கனம் வராமல் விடுமா? திடீர் என கணனிகள் கோளாறு பண்ண இயக்கம் தடைப்பட்டது. அதனைத் திருத்துவதற்கு ஒருவர் வந்தார். அதுவரை எமக்கு ஓய்வு. அந்த நேரத்தில்.. நீங்கள் படிக்கும் இந்த சிவத்தமிழ் புத்தகம் அவர்கள் கண்ணுக்குப்பட்டது, என்ன புத்தகம் என்று என்னிடம் கேட்டார்கள். நான் சொன்னேன் இது ஒரு ஆன்மீகத் தேடல் என்றேன்.

அவர்களுக்கு தமிழ்மொழி தெரியா விட்டாலும் எனது பதிலும், புத்தகத்தின் அமைப்பும் அது ஒரு சமயப் புத்தகம் என புரியவைத்தது.

நிதானமாக எனக்கு சொன்னார். இது எல்லாம் பொய். மனிதன் செய்யும் இத்தனை வேலைகளையும் எவரா லும் செய்ய முடியாது! ஏன் நீங்கள் நினைக்கும் கடவுளாலும் செய்ய முடியாது. என்றார்.

இப்போது அங்கு தடைப்பட்ட கணனி மீண்டும் செயற் படத் தொடங்கிவிட்டது, அதனைத் திருத்த வந்தவர் அதற்கான நேரத்தை பதிவுசெய்து விட்டு செல்கிறார். இப்போ இந்தக் கணினியை மீண்டும் இயங்கவைத் தவர் யார். இந்த தொழிலகத்தின் முதல்வனா? இல்லை அவர் அனுப்பிய ஊழியனா என்றேன்.

அவர் அனுப்பிய உழியனே என்றார்.

நான் ஒரு வார்த்தையில் சொன்னேன், உண்மைதான். கடவுள் அனுப்பிய உழியர்தான் நாமும். இந்த அளவுக்கு திறமைகளைப்படைக்க அந்த ஆச்சரிய மான ஆற்றலைத் தந்தவன் அவன். அவனைத்தான் நாம் கடவுள் என்கின்றோம். அந்த சக்திக்கு நீங்கள் என்னபெயர் சொல்லியும் அழைக்கலாம், என்றேன்.

தன்னை மறந்து “ஓ மை கோட்” என்றார்.

நான் **ஓம்** என்றேன்.

“ஓம்” என்றுதான் அவர்களும் சக்தியை விஞ்ஞானத் தில் சொல்கிறார்கள்.

மு.க.சு.சிவகுமாரன்



# புறாக்கள் கூறிய பாடம்



ஒரு சிவன் கோயிலின் மாடங்களில் நிறைய புறாக்கள் வாழ்ந்து வந்தன. கோவிலுக்கு வெள்ளை அடிக்க ஆரம்பித்தார்கள் புறாக்கள் அங்கு வாழமுடியாமல் எதிரில் இருந்த மாதா கோயிலில் போய் வாழ ஆரம்பித்தன அவை நிம்மதியாக இருக்கும் போது கிறிஸ்துமஸ் வந்தது அங்கும் கோவிலுக்கு வெள்ளை அடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். மீண்டும் புறாக்களுக்குத் தொல்லை. ஆவை வேறு வழியின்றி அருகிலிருந்த பள்ளிவாசலில் தஞ்சம் புகுந்தன.

சில நாட்கள் சென்றன ரம்ஜான் அன்று மசூதியைச் சுத்தப்படுத்த ஆரத்பித்தார்கள். புறாக்களுக்கு மீண்டும் தொல்லை என்ன செய்வது என்று யோசித்தன. கோயில் கும்பாபிஷேகம் முடிந்து ஆரவாரங்கள் ஓய்ந்து விட்டிருந்தன. எனவே மீண்டும் கோயிலுக்கே திரும்பி புறாக்கள் வாழ ஆரம்பித்தன. அப்போது ஏதோ கலவரம் ஒருவரை ஒருவர்துப்பாக்கியால் சுட்டுக்கொண்டனர் கத்தியால் வெட்டிக் கொண்டார்கள் .மாடங்களில் இருந்து புறாக்கள் எட்டிப்பார்த்தன.

ஒரு குஞ்சுப்புறா தன் அம்மாப்புறாவிடம் கேட்டது இந்த மனிதர்களுக்கு என்ன ஆயிற்று? அம்மாப்புறா அவர்களுக்கு மதம் பிடித்து விட்டது என்றது.
குஞசுப்புறா நமக்கு ஏன் மதம் பிடிக்க வில்லை? என்று கேட்டது.

அதற்கு அம்மாப் புறாநாம் கோயிலில் இருந்தாலும், சர்ச்சில் இருந்தாலும், பள்ளிவாசலில் இருந்தாலும், நமக்குப் பெயர்புறா தான். ஆனால், மனிதன் கோயிலிலிருந்தால் இந்து. சர்ச்சில் இருந்தால் கிறிஸ்தவன். பள்ளிவாசலில் இருந்தால் முஸ்லீம், ஆகிவிடுகின்றான். அதனால் இப்படி அடித்துக் கொள்கிறான் என்று விளக்கம் கூறியது .அப்படியானால் நாம் மனிதர்களைவிடச் சிறந்தவர்கள் அல்லவா என்று பெருமைப்பட்டுக் கொண்டது. குஞ்சுப்புறா. ஆதனால்தான் நாம் உயர்ந்த இடத்தில் இருக்கின்றோம் என்றது அம்மாப்புறா.

நாம் எங்கிருந்தாலும் எந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தாலும் மனிதர்களாக வாழ தெய்வத்தைப் பிரார்த்திப்போம்.



# இதுதான் இல்வாழ்க்கை

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

மனிதன் தன்னுடைய உணர்வுகளைப் புலப்படுத்த மொழியை உருவாக்கினான். அந்த மொழி பேச்சு மொழியாக மட்டுமன்றி எழுத்து மொழியாகவும் வளர்ச்சி பெற்றபோது மனிதனுடைய வாழ்வியல் நடைமுறை களையும் பதிவு செய்யும் ஒரு கருவி ஆகிற்று. உலகத்திலே தோன்றிய எல்லா மொழி களுக்கும் இக்கருத்துநிலை பொதுவானது எனலாம். ஆனால் தமிழ் மொழியின் பதிவுகள் உலகமே வியக்கும் வகையில் சிறப்பாக நடைபெற்றதை அறிய முடிகிறது. இதற்குச் சான்றாக பண்டைத் தமிழிலக்கியத் தொகுப்பு நூல்கள் எம் மிடையே உள்ளன. அந்நூல் களில் தமிழர் வாழ்வியல் சிறப்பாகப் பதிவு செய்யப் பட்டிருப்பதை இன்றுள்ள தமிழர் மட்டு மன்றிப் பிறமொழி யாளரும் அறியவேண்டும்.

தமிழ் மொழியில் எழுந்த நூல்களில் திருக்குறள் மொழியால் வாழ்வைப் பதிவு செய்யும் நிலையில் முன்னிலை வகிக்கின்றது. குறுகிய குறட்பா வடிவில் மனித வாழ்வியல் வெகு நுட்பமாக விளக்கப்பட்டுள்ளது.

இன்றைய இளந்தலைமுறையினர் இக்கருத்து களை அறியவேண்டும். ஏனெனில் திருக்குறள் உலகமொழிகளில் ஏறக்குறைய தொண் ணூறுக்கு மேற்பட்ட மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ் மொழியைத் தாய் மொழியாகவும் கற்கை மொழியாகவும் கொண்டவர்களுக்கு ஒரு கடமை உண்டு. திருக்குறள் பதிவுசெய்துள்ள தமிழர் வாழ்வியலைப் பிறமொழிகளில் மொழ பெயர்த்தோரின் விளக்கங்களைச் சரிபார்க்க வேண்டும்.

திருக்குறள் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டபோதுதான் அது உலகம் அறிந்த தமிழ் நூலாயிற்று. ஆனால் இதற்குமுதல் 1730இல் வண. பெஸ்கி பாதிரியார் லத்தீன் மொழியில் மொழி பெயர்த்திருந்தார். இன்று பல்வேறு நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் இளைய தலை முறையினர் தாம் வாழும் நாட்டு மொழியில் கற்கைநெறியை மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்களுக்கு அந்த நாட்டு மொழியிலே திருக்குறள் மொழி பெயர்க்கப் பட்டிருப்பின் மூல மொழியோடு மொழி பெயர்ப்பை ஒப்பு நோக்கும் ஆற்றல் உண்டு. தமிழ் மொழியைக் கற்கை நிலையிலே இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியாகக் கற்கும் அவர்களுக்குத் திருக்குறளின் நுட்பமான பொருள் அறிவுறுத் தப்படவேண்டும். தமிழிலே திருக்குறளுக்குப் பலர் உரைவிளக்கம் எழுதியுள்ளனர்.

எனினும் குறட்பாக்களிலே பதிவு செய்யப் பட்டுள்ள தமிழரின் மரபான வாழ்வியல் இன்றைய காலத்திற்கு ஏற்ற வகையில் எடுத்து விளக்கப்பட வேண்டியுள்ளது.

அந்த வகையில் திருக்குறளில் ஒரு குறள் பதிவு செய்துள்ள வாழ்வியலை இவ்வெழுத்துரு எடுத்துக்காட்டவுள்ளது.

'இல்வாழ்க்கை' என்பது தற்போது ஒரு குழப்பமான வாழ்க்கையாகக் கருதப்படுகிறது. அதற்கான காரணங்களும் பல்வேறு நிலை களில் ஆராயப்பட்டு வருகின்றன. குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே இல்வாழ்க் கையைப் பற்றிய தெளிவின்மையே நிலவு கின்றது. ஆணும் பெண்ணும் திருமணம் என்ற பிணைப்பால் இணைந்து ஓரிடத்தில் நிலைத்து வாழும் வாழ்க்கை இல்வாழ்க்கையாகும்.

'இல்' என்பது பலர் கூடி வாழும் இடம். தமிழர் பண்பாட்டில் மூன்று தலைமுறைகள் ஒன்றாய்க்கூடி மகிழ்வாய் வாழும் இடமே இல்லமாக அமைந் திருந்தது. இது ஒரு மரபான வாழ்வியலாகப் பின்பற்றப்பட்டு வருகி றது. இல்வாழ்க்கையின் செல்நெறியையும் பயனையும் தமிழர் வாழ்வியலூடாகக் கண்ட வள்ளுவர் அதனை எல்லோரும் அறியும் வண்ணம் ஒரு குறளிலே பதிவுசெய்துள்ளார்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
(குறள் 45)

'இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக விளங்குமாயின் அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவேயாகும்' என இக்குறளுக்கு உரைவிளக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அன்பு, அறன் என்ற இரு சொற்களாலும் வள்ளுவர் குறிப்பிட்ட வாழ்வின் செல்நெறி இன்று மாற்றமடைந்துவிட்டது. பிறருக்காக வாழ்கின்ற வாழ்க்கையே அன்பான வாழ்க்கை யாகும். அன்பு ஆர்வத்தை உண்டாக்கும். அந்த ஆர்வம் நட்புறவை ஏற்படுத்தும். இல்வாழ்க்கையில் இந்த அன்பு செயற்படும் போது கணவனும் மனைவியும் ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுக்கும் மனோநிலை யுடையவராகச் செயற்படுவர். பிறருக்காக வாழ்தல் என்ற அன்பான வாழ்க்கையின் பயிற்சிக்களமும் இல்வாழ்க்கைதான்.

இக்குணத்தின் வளர்ச்சிநிலை மகப்பேற்றால் தொடர்கிறது. வெறுமனே ஒருவருக்கொருவர் என்ற வாழ்வு நிலையில் உயர்ச்சி ஏற்படுகிறது. மகப்பேற்றுக்கான கருவைத் தந்தவன் தந்தையாகவும் கருவைத் தாங்கிக் குழந்தை யுருவாயத் தந்தவள் தாயாகவும் வளர்ச்சி பெறுகின்றனர். இந்த வளர்ச்சி இல்லம் உருவாக வழிவகுக்கிறது. தொடரும் மக்கட் பேறுகள் மக்கட் செல்வமாகின்றன. அவர் களிடம் அன்பு செலுத்தி வாழும் அன்பு வாழ்க்கை இல்வாழ்க்கையின் இனிய செல் நெறியாக இருந்தது.

இல்வாழ்க்கையின் பண்புநிலைகளை உருவாக்க அன்புதான் அடிப்படையாக இருந்தது. பண்பெனப்படுவது பாடறிந் தொழு கலாகும். ஒருவர் மனநிலையைப் புரிந்து அவரோடு இணைந்து வாழும் மனோநிலை இல்லத்தில்தான் உருவாகும். பெற்றோர், குழந்தைகள், உறவினர் எனப் பலர் கூடி வாழும் இனிய இல்லம் பண்பின் நிலைக்



களமாகும். வள்ளுவர் குறிப்பிட்ட அறம் இல் வாழ்க்கையின் பயனை முழுமையாகத் தரவல்ல ஒரு செயற்பாடாகும். வள்ளுவர் அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கையென ஒரு வரையறையைக் குறட்பாவிலே செய்துள்ளார். தன்னைச் சார்ந்து வாழ்பவருக்கு வேண்டி யவற்றைச் செய்யும் பணி அறப்பணியாகம். தன்னலத்தை விட்டுப் பிறர்நலம் பேணும் சிறந்த தாய்மைக்குணம் அறத்தின் அடிப்படை யாகும். இக்குணம் ஆணிடமும் பெண்ணிடமும் உள்ளீடாக உள்ளது. இல்வாழ்க்கையில் அது இருவரிடமுமே வெளிப்படையாகத் தோன்றும்.

பெற்றெடுத்த குழந்தைகளுக்கு வேண்டிய வற்றை உரிய காலத்திலே செய் கின்ற அறம் இல்வாழ்க்கையின் பயனை அறிவுறுத்திநிற்கும்.

அடுத்த தலைமுறையை உருவாக் கும் அறப்பணியை ஆணும் பெண்ணும் ஏற்றுச் செயற்பட இல்வாழ்க்கை வாய்ப்புத்தருகிறது. இயற்கைச் சூழலையும் காலத்தின் நகர்வையும் உற்று நோக்கி மனிதன் வாழ்வியல் நடை முறைகளை வகுத்துக்கொண்டதை வள்ளுவர் பதிவுசெய்துள்ளார்.


இல் வாழ்க்கை என்பது மனிதனைப் பண்படுத்தும் ஒரு வாழ்க்கையாக நீண்ட காலமாகத் தமிழர் மரபிலே பேணப்பட்டு வந்துள்ளது. இன்று பிற பண்பாட்டுத் தாக் கங்களால் இக்கருத்து மறைக்கப் பட்டுள்ளது. வெறுமனே ஆணும் பெண்ணும் காம இன்பத்தை நுகரும் போலி வாழ்க்கையே மிகுந்த இந்நூற்றாண்டில் இல்வாழ்க்கையின் பண்பையும் பயனையும் மீள நினைவூட்டல் செய்வது எதிர்கால இளந்தலைமுறையினரை நெறிப்படுத்துவதாக அமையும்.

# அவன் ஒளியும், ஒளி விதியும்!






சிவப்பிரியன்




Light Travels in a Straight Line

இன்று நினைத்தவுடன் நினைத்த இடத் திற்கு பேசலாம். பார்க்கலாம். இப்படி விஞ்ஞானம் முன்னேறியுள்ளது. இது விஞ் ஞானம் தந்த வாழ்வு என்றால்.

இந்த மெய்ஞானத்தைப் பாருங்கள். சற்ற லைட்டும் இல்லை, மின்சாரமும் இல்லை, ஆனால் அந்த விஞ்ஞானம் செய்வதற்கு மேலாக நமக்குள்ளே இருக்கும் ஆன்மா வின் சக்தி புரியும் செயல் களைக் கவன ியுங்கள்.

ஒன்று நல்லதை, சுயநலமற்ற தொண்டினை, உண்மையை உங்கள் மனதில் நிறுத்தி ஒரு செயலை செய்யத் தொடங்கினால்.
தொலைபேசி இல்லாமலே ஒருவருடன் உரையாடலாம். ஸ்கைப் இல்லாமலே ஒருவரைப் பார்தும் கதைக் கலாம். இவை நடக்க பாரதி சொன்னதுபோல்

**வாக்கினிலே இனிமை வேண்டும், நினைவு நல்லது வேண்டும் இவை இருந்தால் போதும்.**

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் சுயநலமற்ற சிந்தனை களின் போது, இந்தச் சித்து விளையாட்டு அரங்கேறி யிருக்கும்.
ஒரு நாள் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. “நான் இலங்கையில் ஒரு மாணவ னுக்கு கல்விக்கு உதவ விரும்புகிறேன். ஒரு தொடர்பு ஏற்படுத்தி தருவீர்களா?” என்று.

தர்மம் செய்வதைவிட தர்மம் சரியான வழியில் சென்றடைகிறதா? என்பதனைக் கண்டுகொள்வது இன்று கடினமான ஒரு பணி. எனவே எனக்கு நம்பிக்கை ஆன சமூகசேவையில் தன்னை ஆத்மாத்மமாக ஈடுபடுத்திய ஒருவரின் தொலை பேசி இலக்கத் திற்கு தொடர்பு கொண்டேன்.

உடனே அங்கு வேலை செய்பவர் ஐயா உங் களுக்குத் தான் அழைப்பு, என்று கொடுத்தார். அவரும் ஆச்சரியத்துடன் எனக்கா! என்றார்.
ஆம் என்றபடியே அவரிடம் கொடுக்க...

நான் சொன்னேன் ஒரு மாணவனுக்கு உத வேண்டும் சரியான ஒரு மாணவனைத் தெரிவு செய்துதாருங்கள் என்று.

எனது வேண்டுதலைக் கேட்டாலும் அவருடைய இதயம் படபட என அடித்ததை என்னால் உணர முடிந்தது.

அவர் சொன்னது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் அவசரமாகக் கேட்டார், எப்படி நான் இங்கு நிற்பது தெரியும் என்றார்.

தொடர்ச்சி மறுபக்கம்

# ஒரே நேர் கோட்டில்

நான் இந்த வேலையில் இருந்து ஓய்வு பெற்று சரியாக 2 வருடங்கள் ஆகிவிட்டது. நான் இன்று ஏதோ ஒரு அலுவலக முன்பு வேலை செய்த, இந்த அலுவல கத்திற்கு வந்தேன்.
நான் வாசலில் வர உங்கள் மணியடிக்க தொலை பேசியை அவர் என்னிடம் நீட்டுகிறார். இந்த ஆச்சரி யத்தில் இருந்து நான் இன்னும் மீளவில்லை என்றார்.
பாரத்தீர்களா ஒளி மட்டுமல்ல, உள்ளமும் ஒரு நேர்கோட்டில் செல்லும் போது, முழுமையான அந்த ஒளியை யாரும் தரிசிக்கலாம்.
இன்னுமொரு சம்பவம். யேர்மனியில் ஒருவர் இலங்கையில் உள்ள ஒரு சேவை நிலையத்தின் தொலைபேசி இலக்கம் தெரியுமா என்று எடுத்தார். நான் பத்திரிகை வேலை தற்போது உடன் முடியாது, விசாரித்து இரு தினங்களில் சொல்கிறேன் என்று சொல்லிவைத்தேன். எதற்கும் அவ ருடைய தொலைபேசி இலக்கத்தை, தொலை பேசியில் பார்த்து ஒரு கடுதாசியில் எழுதினேன்.
எழுதி முடிக்க தொலைபேசி மணியடித்தது.

நான் மீண்டும் அவர்தான் என்று எடுத்தேன்.
என்ன அதிசயம். அது அவர் கேட்ட அந்த தொண்டர் நிறுவனத்தின் ஒரு தொண்டர்.
எப்படி! எப்படி!!
இப்படி எல்லாம் நடக்கிறது!
என்று பாரத்தால் நம்முள்ளே ஒரு சக்திகுவிந்து இருப்பது தெரிகிறது.. சுயநலத்தை உரித்துவிட்டு ஒரு நேர் கோட்டில் பாரத்தால் அந்த ஒளிபோல் சக்தியின் முழுவடிவம் தெரியும்.

**உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே உள்ளது புரியும்.**

# பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்ய வேண்டிய காரியம் தட்டிக் கொடுப்பது மட்டும்தான்

மக்கள் பொதுவாக வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளையெல்லாம் தங்களுடன் வாழ் பவர்கள் மீதோ, அல்லது அது தவறினால் தெய்வத்தின் மீதோ சுமத்துகிறார்கள். அல்லது புதிதாக அவர்கள் ஏதோ பேய் பிசாசு என்று கற்பித்துக்கொண்டு, அதைத் தலைவிதி என்று சொல்கிறார்கள். விதி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? எதை விதைத் தோமோ அதைத்தான் அறுவடை செய்கி றோம்.

நமது விதியை நாமே வகுத்துக் கொள் கிறோம். எனவே, அதன் பொருட்டுத் தூற்று வதற்கும் ஒருவருமில்லை பாராட்டுவதற் கும் ஒருவருமில்லை.
காற்று வீசியபடி இருக்கிறது. பாய்மரங்களை விரித்துக் காற்றை பயன்படுத்திக்கொள்ளும் கப்பல்கள் தங்கள் வழியே முன்னேறிச் செல்கின்றன. ஆனால் பாய்களை சுருட்டி வைத்துள்ள கப்பல்கள் காற்றை ஏற்றுப் பயன் பெறுவதில்லை.
இது காற்றினுடைய குற்றமாகுமா? 'நான் அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்தத் துன்பம், என்னுடைய சொந்தச் செயல் களாலேயே உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒரு நிலையே, என் ஒருவனால் மட்டுமே அது நீக்கப்பட வேண்டும் என்பதைக் காட்டுகிறது' என்று சொல். நான் எதைப் படைத்தேனோ அதை என்னால் அழிக்கவும் முடியும். பிறரால் படைக்கப்பட்ட ஒன்றை ஒருபோதும் என்னால் அழிக்க முடியாது. எனவே, எழுந்து நில். தைரியமாக இரு. வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதும் உன் தோள் மீதே சுமந்துகொள். உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்துகொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.

நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும், குறிப்பிட்ட ஒரு காலத்திற்குப் பிறகு சூட்சுமத் தன்மையை அடைகிறது. பின்பு அது வித்து வடிவத்தைப் பெற்று மறைந்திருக்கும் நிலையில் நமது சூட்சும சரீரத்தில் வாழ்கிறது. மீண்டும் சிறிது காலத்திற்குப் பிறகு அது வெளிப்பட்டு வந்து தனக்கு உரிய பலன் களைத் தருகிறது. இந்தப் பலன்களே நம்முடைய வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன. இவ்விதம் மனிதன் தனது வாழ்க்கையைத் தானே உருவாக்கிக் கொள்கிறான். தனக்குத் தானே அமைத்துக் கொள்ளும் விதிகளைத் தவிர, வேறு எதற்கும் மனிதன் கட்டுப்பட்டவன் அல்ல.

**பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்ய வேண்டிய காரியம் தட்டிக் கொடுப்பது மட்டும்தான்**

**சுவாமி. விவேகானந்தர்**

# சுவாமி விவேகானந்தரின் போதனைகள் ஓர் சர்வதேச வன்முறை நிவாரணி!



**சேவியர்**

சுவாமி விவேகானந்தரை அறியாதவர்கள் உலக அளவிலேயே மிகக் குறைவாகத் தான் இருப்பார்கள் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. அந்த அளவுக்கு உலகின் பல எல்லைகளையும் வசீகரித்த சிந்தனைகள் அவருடையது.

மனுக்குலத்தின் மிகப்பெரிய பலம் நமக்கு ஏராளமான தத்துவ ஞானிகளும், ஆன்மீக வாதிகளும், சிந்தனையாளர்களும் கிடைத் திருப்பது தான். நமது மிகப்பெரிய துரதிஷ்டம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மத அடையாளத் துக்குள் அடைக்கப்பட்டு விட்டது தான். பாட்டிலுக்குள் அடைக்கப்பட அலாவுதீன் பூதம் போல இருக்கும் இந்த சிந்தனைவாதிகளை உரசிப் பயன்படுத்த பிற மதத்திலுள்ளவர்கள் தயங்குவதும், அச்சப்படுவதும் வெகு சாதாரணம்.

தாழ்மையையும், அன்பையும், மனித நேயத்தையும் போதித்தவர் இயேசு. “என்னைப் பின் செல்லுங்கள்” எனும் வார்த்தையின் மூலம் அவருடைய செயல்களையும், வாழ்க் கையை யும் அப்படியே பின்பற்ற அழைப்பு விடுத்தார். அவரை கிறிஸ்தவம் எனும் மதத்திற்குள் அடைத்து வைத்ததனால் தனிமைப்படுத்தப் பட்டு விட்டார்.

வாழ்க்கையை ஆனந்தமாய் வாழ வியப்பூட்டும் சிந்தனைகள் சொன்ன புத்தர் இன்னொரு மதத்துக்குள் பூட்டப்பட்டு விட்டார். அதே நிலை தான் விவேகானந்தருக்கும். அற்புதமான தத்துவங்களும், வாழ்வியல் வழிகளும், நிர்வாகப் பார்வைகளும் கொண்ட விவேகானந் தரும் மத அடையாளத்துக்கு உள்ளே தான் அடைக்கப்பட்டிருக்கிறார்.

அந்த மத அடையாளங்களைத் தாண்டி அவர்கள் சொன்ன சிந்தனைகளை அறிந்து கொள்வதும், அவற்றை வாழ்க்கையின் பாதையில் பயன்படுத்தி முன்னேறுவதுமே நம்மிடமிருந்து அந்த மகான்கள் எதிர்பார்க்கும் விஷயம்.

**நாம் பெரும்பாலும் மகான்களை பூஜித்து விட்டு, அவர்களுடைய சிந்தனை களுக்கு பூஜ்யம் மரியாதை மட்டுமே கொடுக்கிறோம். மகான்கள் வழிபாட்டுக்கு உரியவர்களல்ல, அவர்கள் வழிகாட்டுதலுக்கு உரியவர்கள் எனும் உண்மையை நாம் உணர்தல் நமது முதல் தேவை.**

விவேகானந்தருக்கு இருந்த சிந்தனைத் தெளிவும், அறிவுக் கூர்மையும், நிர்வாகச் சிந்தனையும் மிகவும் வியப்புக்கு உரியது. நிறைகுடம் தழும்பாது எனும் கூற்றுப் படி அவர் பிற மதங்களை பாராட்டவும் வாழ்த்தவும் தயங்கவே இல்லை. வெளிப்படையாகவே அவர் புத்தமதத்தின் கோட்பாடுகளின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

இயேசுவின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டி ருந்தார். இயேசுவைப் போல ஆகவேண்டும், இயேசுவை இமிடேட் செய்வதல்ல, அவராகவே மாறவேண்டும். அதையே நான் விரும்புகிறேன். அவர் காலத்தில் நான் இருந்திருந்தால் அவருடைய பாதங்களைக் கழுவியிருப்பேன், கண்ணீரினால் அல்ல, இதயத்திலிருந்து வடியும் இரத்தத்தினால். என அதீத ஈடுபாட்டை வெளிப்படுத்தவும் அவர் தயங்கவில்லை.

சாதாரண வாழ்க்கையை விட்டு விட்டு ஆன்மீக வாழ்க்கையைத் தேடிபோன போது விவே கானந்தர் கையில் இரண்டு புத்தகங்கள் இருந்தன. அவையே அவருடைய ஆன்மீக வாழ்க்கைக்கான அடித்தளத்தைக் கொடுத்தன. ஒன்று பகவத் கீதை, இன்னொன்று த இமிடேஷன் ஆ∴ப் கிரைஸ்ட் (இயேசு கிறிஸ்துவின் பிம்பம் ). !

மதங்களுக்கு இடையேயான பகைமை உணர்ச்சியும், வெறுப்பு உணர்ச்சியும் வாழ்க் கையை செம்மையாகவும், வளமையாகவும் கொண்டு செல்லாது என்பதையே அவருடைய வாழ்க்கை எடுத்துக் காட்டுகிறது.

1863ம் ஆண்டு ஜனவரி 12ல் கல்கத்தாவில் பிறந்த விவேகானந்தர் 1902ம் ஆண்டு ஜூலை 4ம் ஆண்டு இயற்கை எய்தினார். இது அவருடைய 150வது நினைவு ஆண்டு ! அவரை நினைவுகூரும் இந்த ஆண்டில் அவரை ஒரு வழிபாட்டு மகானாகப் பார்க்காமல் ஒளிகாட்டும் மகானாகப் பார்ப்பதே தேவையானது !

எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதில் முழுக்க முழுக்க உனது கவனத்தைச் செலுத்து. அதுவே உனக்கு வெற்றியைத் தரும் என்று ஒரு முறை அமெரிக்காவில் சிறுவர்களிடம் விவேகானந்தர் கூறினார். பறவையின் கண்ணைப் பார்த்து அம்பு எய்த அர்ஜுனரைப் போல, முழு கவனத்தையும் ஒரு விஷயத்தில் வைத்தால் வெற்றி பெறலாம் எனும் அவருடைய சிந்தனை மிகவும் வலுவானது !

அதே சிந்தனையை இன்னும் வலுவூட்டி நமக்கு ஒரு மிகப்பெரிய வாழ்வியல் போதனையாய் தருகிறார். இந்த ஒரே ஒரு விஷயத்தை மனதில் கொண்டாலே அலுவல் வெற்றிகள் நம்மைத் தேடி வருவது சர்வ நிச்சயம் ! உண்மையில் வெற்றியாளர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பார்த்தால் அவர்கள் இந்த ஒரு சிந்தனையின் அடிப்படையிலேயே இயங்கியிருக்கும் உண் மை விளங்கும். விவேகானந்தர் சொன்னது இது தான்.

“ஒரே ஒரு லட்சியத்தை எடுத்துக் கொள். அதுவே உனது வாழ்க்கை எனக் கொள். அதைக் குறித்து மட்டுமே சிந்தித்துக் கொண்டிரு. அதைக் குறித்து மட்டுமே கனவுகளைக் காண். உனது நாடி, நரம்பு, இரத்தம், சதை, மூளை, உடலிலுள்ள ஒவ்வொரு பாகத்திலும் அந்த இலட்சியத்தை நிரப்பிவை. மற்ற எல்லா சிந்தனைகள் எண்ணங்களை விலக்கி விடு. இதுவே வெற்றிக்கான மந்திரம்”

ஒரே ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டு அதில் சிறந்து விளங்கும் 'சிஸ்டம் மேட்டர் எக்ஸ்பர்ட்' ஐடியாவே இது. உங்களுக்குப் பிடித்த எந்த ஒரு சாதனையாளரையும் எடுத்துக் கொள்ளுங்கள். அவருடைய வாழ்க் கையை அலசுங்கள். இந்த சிந்தனை அங்கே செயல்பட்டிருப்பதைப் பார்க்க முடியும் !

தன்னம்பிக்கையின் அத்தனை அம்சங் களையும் விவேகானந்தரின் வார்த்தைகளில் காணலாம். அதே போல தன்னம்பிக்கைப் பாடம் அவருடைய போதனைகளில் சரளமாய் வழிவதையும் நாம் எப்போதும் காண முடியும். “உன்னையே நீ நம்பாமல் உன்னால் கடவுளை நம்ப முடியாது” எனும் புதிய போதனையை விவேகானந்தர் மட்டுமே சொல்ல முடியும். தன்னை அழிப்பதன் மூலம் இறையை அடைவதையே வேதங்களும், மதங்களும் போதிக்கின்றன. தன்னை அறிவதன் மூலமும், தன்னை நம்புவதன் மூலமும் கடவுளை நம்பும் புதிய போதனை விவேகானந்தரிடம் இருந்தது ! தன்னிடமும்இ தன் ஆன்மாவிடமும் இருக்கும் சக்தி அபரிமிதமானது. அதைக் கொண்டு சாதிக்க முடியாத விஷயங்களே இல்லை என்பதையே விவேகானந்தர் அடிக்கடி போதித்தார் !

அதனால் தான் தன்னைக் கூட அவர் ஆசிரியராய்க் கருதவில்லை.

**'நீ உன்னி லிருந்தே உருவாகவேண்டும். உன்னை யாருமே ஆன்மீகவாதி ஆக்க முடியாது. உனக்கு யாரும் கற்றுத்தர முடியாது. உனது ஆன்மாவே உனது ஆசான் ‘ எனும் அவருடைய போதனைகளின் அடிப்படை தனி மனித தன்னம்பிக்கையைக் கட்டி எழுப்புவதும். ஆழ்மன சக்திகளை அடை யாளம் காண்பதும் தான் !**

அதனால் தான் அவருடைய ஆன்மீகம் எல்லைகளைத் தாண்டி உயரமாய் மாறியது. “நான் காணும் மனிதர்களிடமெல்லாம் கடவுளைக் காண்கிறேன். மனித உடல் கடவுள் வாழும் ஆலயம். இந்த உண்மையை நான் உணரும் தருவாயில் கட்டுகள் அறுக்கப்பட்ட சுதந்திர மனிதனாய் உணர்கிறேன்” என்கிறார் விவேகானந்தர்.

சகமனிதனில் இறைவனைக் காண்பவர்கள் மனுக்குலம் முழுதும் மனித நேயம் தவழவேண்டும் என விரும்புவார்கள். வெறுமனே கற்களால் கட்டிய ஆலயங்களில் மட்டுமே கடவுளைக் காண்பவர்களால் அது முடியாது. அவர்கள் கற்களைப் பாதுகாத்து உயிர்களை அழிக்கத் திரிவார்கள். ஆனால் அது உண்மையான ஆன்மீகம் அல்ல. இதையே விவேகானந்தரின் தேடல் நமக்கு அற்புதமாய் விளக்குகிறது.

பல்வேறு நதிகள் பாய்ந்தாலும் அவை சேரும் இடம் கடல் தான். அதுபோல எத்தனை மத சிந்தனைகள் உருவானாலும் அவை அடையும் இடம் கடவுள் தான். அந்தக் கடவுளை மிகவும் நேசத்துக்கு உரியவராக, எல்லோரையும் விட அதிகமாய் அன்பு செய்ய வேண்டும் என்கிறார் விவேகானந்தர்.

கடவுளையும் அவருடைய வழிகளையும் முதலில் தேடுங்கள்.

தொடர்ச்சி 21 ம் பக்கம்

# மக்கள் சேவையே மகேசன் சேவை என எண்ணிய துறவி சுவாமி விவேகானந்தர்

பேராசிரியர் அ.சண்முகதாஸ்



கன்னியாகுமரி தியான மண்டபம்

"இளைஞர்களே! உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால் என்னை நம்புவ தற்குரிய தைரியம் இருக்குமானால், ஒளிமய மான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக் கிறது என்பேன்".
"என் குழந்தைகளான நீங்கள் என்னைவிட நூறு மடங்கு சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."
இவ்வாறு இளைஞர்களையும் குழந்தைக ளையும் விளித்து அவர்களுக்கு நம்பிக்கை யூட்டும் வகையிலே உரையாற்றியவர் சுவாமி விவேகானந்தர்.
சுவாமி விவேகானந்தர் 1863ஆம் ஆண்டு தைமாதம் 12ஆம் திகதி பிறந்தார். அவரது இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா. தாய்மொழி வங்காளம்.
சிறு வயது முதல் வியக்கத்தக்கபடியான நினைவாற்றல் கொண்டவராகவும் சிறந்த விளையாட்டு வீரராகவும் திகழ்ந்தார். இசை யினை நன்கு கற்றார். சிறு வயது முதலே தியானம் பழகினார். பள்ளிப்படிப்பு முடிந்த வுடன் 1879ஆம் ஆண்டு கொல்கத்தா விலுள்ள மாநிலக் கல்லூரியில் கற்றபின்னர் ஸ்கொட்டி' சேர்ச் கல்லூரியில் தத்துவம் பயின்றார்.

அங்கே மேல்நாட்டுத் தத்துவங்கள் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் வரலாறு முதலிய வற்றைப் படித்தறிந்தார். இவ்வேளையில்தான் அவருக்கு இறை பற்றிய உண்மைகளை அறியவேண்டுமென எண்ணம் உண்டாயது. அவருடைய மனதில் இறை உண்மைகளைப் பற்றி பல ஐயங்கள் எழுந்தன. அவற்றைத் தீரத்துக்கொள்வதற்காக இராமகிருஷ்ணரை 1881 ஆம் ஆண்டு அணுகினார். அவருடைய விளக்கங்களை முதலிலே ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்த நரேந்திரநாத் பின்னர் இராமகிருஷ்ணருடைய சீடரானார். 1886இல் இராமகிருஷ்ணர் சமாதியடைந்த பின்னர் நரேந்திரநாத்தும் ஏனைய சீடர்களும் துறவி களாயினர். நரேந்திரநாத் சுவாமி விவேகானந்தர் ஆனார்
.
சுவாமி விவேகானந்தர் இந்தியா முழுவதும் சுற்றினார். இந்திய மக்களினுடைய பண்பாடு, வாழ்க்கைநிலை ஆகியவற்றை அனுபவ மூலமாக அறிந்து உணர்ந்துகொண்டார்.
இந்திய மக்களுடைய ஏழ்மை நிலையினை நினைந்து அதனை வாழ்ந்தும் அனுபவித்தார். இந்தியா முழுவதும் சுற்றியபின்னர் முடிவில் 1892 டிசம்பர் 24ஆம் திகதி கன்னியாகுமரி சென்ற விவேகானந்தர் அங்கே கடல் நடுவில் அமைந்த ஒரு பாறைமீது மூன்று நாட்கள் தியானம் செய்தார். அங்குதான் இந்தியாவின் வரலாற்றை மீட்டிப் பார்த்து அதன் எதிர்காலம் பற்றியும் எண்ணலானார். இவர் தியானம் செய்த அந்தப் பாறையிலே ஒரு தியான மண்டபம் அமைக்கப்பட்டது.
கன்னியாகுமரிக்குச் செல்பவர்கள் இம் மண்ட பத்தை இன்றும் தரிசித்துச் செல்கின்றனர்.

இந்துசமயத்தின் அடிப்படைகளையும் திறன் களையும் மேலைத் தேயத்தவர்கள் நன்கு உணராத நிலையிலே அவற்றை மிக எளிமையாக உணர்த்தக்கூடிய வாய்ப்பு சுவாமி விவேகானந்தருக்குக் கிடைத்தது.
கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு வந்த அவரை இந்துமதம் சார்பாக 1983இல் அமெரிக்காவில் சிக்காகோ நகரில் நடபெற விருந்த உலக சமய மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு சென்னை இளைஞர்கள் வேண்டிக் கொண்டனர்.
காவியுடையிலே மாநாட்டுக்குச் சென்ற விவே கானந்தரைக் கண்டு பலரும் வியப்படைந்தனர். இவர் என்ன பேசுவார் என எதிர்பார்த்திருந்தனர். மாநாடு தொடங்கியது. எல்லோரும் பல்வேறு வகையிலே சபையினரை விளித்துப் பேசினார்கள்.

விவேகானந்தருடைய நேரம் வந்தபோது அவர் “Sisters and Brothers of America” என்று அவையோரை விளித்துப் பேசத் தொடங்கிய போது அவை ஆரவாரித்தது. முதல் நாளன்று நிகழ்த்திய உரையிலே சுவாமி “All roads lead to Rome” என்னும் ஆங்கில முதுமொழி கூறுவதுபோல பகவத் கீதையிலே “யார் எந்த வழியாக என்னிடம் வர முயன்றாலும் நான் அவர்களை அடைகிறேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழிகளில் என்னை அடைய முயற்சி செய்கிறார்கள். அவை எல்லாம் இறுதியில் என்னையே அடைகின்றன” என்று கூறப்பட் டுள்ள வரிகளை மேற்கோள் காட்டிப் பேசியபோது மேலைத் தேயத்தவர்களுக்கு இந்து மதத்தின் உயர் கருத்துக்கள் பல தெரியவந்தன. இந்த உலக மாநாட்டிலே விவேகானந்தர் நிகழ்த்திய நிறைவுநாள் உரை மிக நீண்ட தொலைநோக்குடையதாகவும் ஒரு வகையில் எதிர்வுகூறுவதாகவும் அமைந்தது. அவர் அன்று: “புனிதம், தூய்மை, கருணை - இவை உலகின் எந்தவொரு பிரிவின் தனிச்சொத்து அல்ல என்பதையும், மிகச் சிறந்த ஒவ்வொரு சமயப் பிரிவும் பண்புள்ள ஆண்களையும் பெண்களையும் தோற்றுவித்து இருக்கிறது என்பதையும் இந்த மாநாடு நிருபித்துள்ளது. இந்த சாட்சியங்களுக்கு முன்பு தம் மதம் மட்டும்தான் தனித்து வாழும், மற்ற மதங்கள் அழிந்துவிடும் என்று யாராவது கனவு காண்பார்கள் என்றால், அவர்கள் குறித்து நான் ஒன்றை என் இதய ஆழத்தில் இருந்து சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இனி, ஒவ்வொரு மதத்தின் கொடியிலும், “உதவி செய்”, “சண்டை போடாதே”, :ஒன்று படுத்து”, அழிக்காதே”, “சமரசமும் சாந்தமும் வேண்டும்”, “வேறுபாடு வேண்டாம்” என்று எழுதப்படும் என்று அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்”. இன்று உலகமெல்லாம் சமய நல்லிணக்கம் பேசப்படுகின்றது. இதனையே விவேகானந்தர் அன்று தன்னுடைய உலகச் சமய மாநாட்டு நிறைவுநாள் உரையிலே குறிப்பிட்டார்.

விவேகானந்தர் உலகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களுக்கு நல்ல சமயக் கருத்துக்களைக் கூறிவந்தார். மனிதர் எல்லோருமே இயல்பாகவே தெய்வீக மானவர்கள். இத் தெய்வீகத்தை உணர்த்து வதே மனிதரின் பிறப்பு நோக்காகும். ஆன்மீகம் என்பது ஒரு குழுவிடமோ காடுகளிலும் மலைகளிலும் தவம் மேற் கொள்வோரிடம் மட்டுமோ இருப்பதல்ல. ஆன்மீகம் மனிதர் எல்லோரிடமும் இருக்க வேண்டியது. இவ்வாறு புரட்சிகரமான கருத்துக்களை தன் சொற்பொழிவுகளூடாக மக்களிடையே பரப்பி வந்தார்.

மக்களுடைய நோய், உணவுத்தேவை, ஏனைய துன்பங்கள் ஆகியனவற்றைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்பது பற்றியெல்லாம் விவேகானந்தர் கன்னியாகுமரிப் பாறையிலே தியானம் செய்யும்பொழுது எண்ணியதாக நாம் அறிகிறோம். மக்களுக்குச் சேவையாற்றப் பலரும் முன்வர வேண்டும் என அவர் அறைகூவி அழைத்தார். மக்கள் எல்லோரும் தெய்வங்கள் என்றால் அவர்களுக்குச் செய்யும் சேவைகள் தெய்வத்துக்குச் செய்யும் சேவைகள் என அவர் எண்ணினார். மக்கள் சேவை மகேசன் சேவை என்பதை நன்கு உணர்ந்துகொண்டு அவர் இராமகிருஷ்ண மடத்தைத் தொடங்கினார். இராமகிருஷ்ண மடமும் இராமகிருஷ்ண மிஷனும் உலகளாவிய இராமகிருஷ்ண இயக்கத்தின் இரண்டு பிரிவுகளாகும். இராமகிருஷ்ண பரமஹம்சரே இராமகிருஷ்ண இயக்கத்தின் ஆன்மீகத் தலைவராகவும் அதனைத் தொடக்கிவைத்தவராகவும் அமைந்தார். 1886இல் பரமஹம்சருடைய இறப்புக்குப் பின்னர் அவருடைய தலைமைச் சீடரான சுவாமி விவேகானந்தரும் ஏனைய சீடர்களும் பரங்கூரில் முதலாவது இராமகிரு‘ண மடத்தைத் தாபித்தனர். பின்னர் 1897இல் மே மாதம் 1ஆம் திகதி சுவாமி விவேகானந்தரால் இராமகிரு‘ண மி‘ன் தாபிக்கப்பட்டது. கர்மயோக நெறிகளை அடிப்படையாகக் கொண்டு சேவையையே முதன்மை நோக்காகக் கொண்ட ஒரு தொண்டு நிறுவனமாகத் தொடங்கிய இராமகிருஷ்ண சுகாதார சேவை, இடர் நீக்கல், கிராமிய முகாமைத்துவம், இன நலச்சேவைகள், தொடக்க மற்றும் உயர்கல்வி, பண்பாடு என்பன தொடர்பாக பல சேவைகளை ஆற்றிவருகின்றது. இவற்றைச் செவ்வனே ஆற்றுதற்கு இராமகிருஷ்ண மடத் துறவிகளும் தொண்டர்களும் பெரும்பணி ஆற்றிவரு கின்றனர். இன்று, சுவாமி விவேகானந்தர் நிறுவிய இராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடம் உலகம் முழுவதும் கிளைகள் நிறுவி செயற்பட்டு வருகின்றன.

சுவாமி விவேகானந்தர் 1902ஆம் ஆண்டு யூலை 4ஆம் திகதி தனது 39ஆம் வயதில் பேலூரில் காலமானார்.







# "கம்போடிய நாட்டு தேசியக் கொடியில் தமிழர்கள் கட்டிய கோயில்!"

உலகின் பெரிய வழிபாட்டுத்தளம் எது என்பது உங்களுக்கு தெரியுமா ? அதை யார் கட்டினார்கள் என்பது தெரியுமா ?
ஆம் அது தான் "கம்போடியா" நாட்டில் நம் கலைத்திறமையை உலகிற்கே காட்டிய "அங்கோர் வாட்" கோயில்.
இரண்டாம் "சூர்யவர்மன்" இந்த இடத்தை கைப்பற்றியவுடன் இந்த பிரம்மாண்ட கோயிலை இங்கு கட்டினான். இந்த இடம் தான் அவனின் தலை நகரமாக செயப்பட்டது.

ஒரு பெருமையான விஷயம், "விஷ்ணு" கடவுளுக்காக கட்டப்பட்ட இந்த கோயிலானது தான் இன்று வரை உலகில் கட்டப்பட்ட வழிபாட்டுத்தலங்களிலேயே "பெரியது !

இந்த கோயிலை ஒரு கலை பொக்கிஷம் என்றே கூறலாம், திரும்பிய திசை எல்லாம் சிற்பங்களை வடித்துள்ளனர். இந்த கோயிலின் ஒரு பக்க சுற்று சுவரே 3.6 கிலோமீட்டர்கள் அப்படி என்றால் இந்த கோயில் எவ்வளவு பிரம்மாண்டமாக கட்டபட்டிருக்கும் என்பதை கொஞ்சம் கற்பனை செய்துபாருங்கள்.

இந்த கோயிலின் ஆரம்பக்கட்ட வடிவமைக்கும் பணிகளானது பனிரெண்டாம் நூற்றாண்டின் முதலாம் பாதியில் தொடங்கியது. இருபத்தி ஏழுவருடங்கள் இந்த இடத்தை ஆண்ட "சூர்யவர்மன்" இறக்கும் சில ஆண்டுகள் முன்பு இதன் வேலைகள் நிறைவடைந்தது.

இதன் பின்னர் ஆறாம் "ஜெயவர்மன்" கைக்கு மாறியது. பின்னர் இந்த கோயில் கொஞ்சம் கொஞ்சமாக "புத்த" வழிபாடு தளமாக மாற்றப் பட்டு. இன்று வரை இது புத்த வழிபாட்டு தளமாகவே செயல்பட்டு வருகின்றது.
பதினாறாம் நூறாண்டிற்கு பிறகு இந்த கட்டிடம் சிறிது சிறிதாக புறக்கணிக்கப்பட்டது, அடர்ந்த காட்டுக்குள் இது கட்டப்படதனால் இது யார் கண்ணிற்கும் படாமல் சிதலமடயத் தொடங் கியது.பின்னர் 1586 ஆம் ஆண்டு " António da Madalena " என்ற போர்சுகீசிய துறவியின் கண்ணில் பட்டது, அதை அவர்

" is of such extraordinary construction that it is not possible to describe it with a pen, particularly since it is like no other building in the world. It has towers and decoration and all the refinements which the human genius can conceive of."
என்று கூறியுள்ளார். பின்னர் Henri Mouhot' என்ற பிரெஞ்சு எழுத்தாளர் தன் புத்கத்தில் இந்த கோயிலின் சிறப்பை வெயிட்டவுடன் தான் இதன் புகழ் உலகம் முழுக்கும் பரவத்தொடங்கியது. அவர் அந்த புத்தகத்தில்

One of these templesa rival to that of Solomon, and erected by some ancient Michelangelomight take an honourable place beside our most beautiful buildings. It is grander than anything left to us by Greece or Rome, and presents a sad contrast to the state of barbarism in which the nation is now plunged."
என்று குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் இங்கு ஆய்வு பணிகளை மேற்கொண்ட பிறகு தான் இது தமிழர்கள் கட்டியது என்று தெரியவந்தது.



இன்றைக்கு இருக்ககூடிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கட்டினால் கூட, இப்போதைக்கு இது போன்ற ஒரு கட்டிடம் கட்ட 300 ஆண்டு கள் ஆகும் என ஒரு பொறியாளர் கூறி உள் ளார். ஆனால் எந்த தொழில் நுட்பமும் இல்லாத அந்த காலத்தில் வெறும் 40 ஆண்டுகளில் இது கட்டி முடிக்கப்பட்டுள்ளது இதில் இன்னொரு சிறப்பு "கம்போடிய நாட்டு தேசியக் கொடியில் நம் தமிழர்கள் கட்டிய இந்த கோயில் தான் "தேசிய சின்னமாக" பொறிக்கப்பட்டுள்ளது.



கடைசியாக ஒன்று இந்த 2012 வரை கண்டு பிடிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பம் வாய்ந்த ஒரு கேமராவில் கூட இன்று வரை இதன் முழு கட்டிடத்தையும் படம் பிடிக்க முடியவில்லை! வானத்தில் 1000 அடிக்கு மேல் விமானத்த்ல் இருந்து எடுத்தால் மட்டுமே இதன் முழு கட்டிடமும் பதிவாகின்றது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த இடத்தை பற்றி அறிவதில் ஆனந்தமே!








# அவுஸ்திரேலிய அபரிஜினல் ஆடப்படும் சிவா நடனம்!









உலகின் தொன்மையான தமிழினத்திற்கும், அவுஸ்திரேலிய அபரிஜினல் (Aboriginal) இனத்திற்குமிடையே பல ஒற்றுமைகள் இருக்கின்றன. அபரிஜினல் இனமக்களின் மொழி, கலாசாரம், பண்பாடு என்பவற்றுடன் உருவ அமைப்பும்கூட தமிழரோடு ஒப்புவமையாக உள்ளது. இந்தியாவின் குமரிக்கண்டம் கடலில் மூழ்கியபோது அங்கிருந்த தமிழினமக்கள் கிழக்கே அவுஸ்திரேலியாவிற்கும், மேற்கே ஆப்பிரிக்காவிற்கும் பரவினார்கள் என்பது செய்தி.

அவுஸ்திரேலியாவில் இப்போதும் கூட களரி ஆட்டம் எனப்படும் நடனம் உள்ளது. பழங்குடிகள் பலவகையான நடனங்களை ஆடுகின்றார்கள். நெற்றியிலே ஒரு கண்ணை வரைந்து கொண்டு, இவர்கள் ஆடும் அந்த ஆட்டத்திற்கு “சிவா நடனம்“ (Shiva Dance) என்று பெயர். உடல் எங்கும் மூன்று கோடுகளாக வெள்ளை வர்ணத்தைப் பூசிக்கொள்கின்றார்கள். நெற்றியிலே மாத்திரம் கிடையாகப் பூசிக் கொள்கின்றனர். Spencer, Killan என்பவர்கள் எழுதியுள்ள The Native Tribes of Central Australia (Dover Publications, Inc., New York, 1968) என்ற புத்தகத்தில் இதற்கான புகைப் படங்கள் ஆதாரமாக (படங்கள் 128, 129 ∴. பக்கங்கள் 621, 622) உள்ளன.






Orientalische Textilien & Schmuck

Germany

உரிமையாளர்: எஸ்.ஜெகதீஸ்


சேலைகளின் சோலை!
நங்கையரின் நந்தவனம்
புன்னகைக்கும் பொன் நகைகள்
தங்களை வியப்புக்குள்ளாக்கி நிற்கும்.

தரமான
தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க
நகை மாளிகை

Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

# "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"

**பிரமிப்பூட்டும் தமிழர்களின் விஞ்ஞானம் !!!**




மன்னராட்சி காலத்தில் ஊரில் கோயில் கோபுரத்தை விட உயரமாக எந்தக் கட்டிடமும் இருக்கக் கூடாது என்று ஒரு எழுதாத சட்டம் இருந்ததாம். அதன் காரணம் என்ன?

கோயில்களையும் உயரமான கோபுரங் களையும் அதன் மேல் இருக்கும் கலசங் களையும் பார்த்திருப்பீர்கள். அவற்றுக்கு பின்னால் இருக்கும் ஆன்மிகம் பற்றி தெரியாது. ஆனால், அதற்குப் பின்னால் எவ்வளவு பெரிய அறிவியல் ஒளிந்திருக்கிறது என இப்போது தான் தெரிந்தது.

கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி, செப்பு அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக்கலசங்களிலும் அதில் கொட்டப்படும் தானியங்களும், உலோ கங்களும் மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியினை (Earth) கலசங்களுக்கு கொடுக் கின்றன. (நெல், கம்பு, கேழ்வரகு, தினை, வரகு, சோளம், மக்காசோளம், சாமை, எள்) ஆகியவற்றை கொட்டினார்கள். குறிப்பாக வரகு தானியத்தை அதிகமாக கொட்டி னார்கள். காரணத்தை தேடிப்போனால் ஆச் சரியமாக இருக்கிறது, "வரகு" மின்னலை தாங்கும் அதீத ஆற்றலை பெற்றுள்ளது என இப்போதைய அறிவியல் கூறுகிறது. அப்போது எந்த கல்லூரியில் படித்தார்கள் என தெரிய வில்லை!!.

இவ்வளவு தானா... இல்லை, பனிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை குடமுழுக்கு விழா என்ற பெயரில் "கலசங்களில் இருக்கும் பழைய தானியகள் நீக்கப்பட்டு புதிய தானி யங்கள் நிரப்பபடுகிறது", அதை இன்றைக்கு சம்பரதாயமாக மட்டுமே கடைபிடிக்கிறார்கள். காரணத்தை தேடினால், அந்த தானியங் களுக்கு பனிரெண்டு வருடங்கள் தான் சக்தி இருக்கிறது. அதன் பின்பு அது செயல் இழந்து விடுகிறது!! இதை எப்படி ஆராய்ந்தார்கள்!!!. அவ்வளவு தானா அதுவும் இல்லை, இன்றைக்கு பெய்வதை போன்று மூன்று நாட்களா மழை பெய்தது அன்று? தொடர்ந்து மூன்று மாதங்கள் பெய்தது, ஒருவேளை தானியங்கள் அனைத்தும் நீரில் மூழ்கி அழிந்து போனால், மீண்டும் எதை வைத்து பயிர் செய்வது? இவ்வளவு உயரமான கோபுரத்தை நீர் சூழ வாய்ப்பே இல்லை, இதையே மீண்டும் எடுத்து விதைக்கலாமே!!!

ஒரு இடத்தில் எது மிக உயரமான இடத்தில் அமைந்த இடி தாங்கியோ அது தான் முதலில் "எர்த்" ஆகும்.

மேலும், அது எத்தனை பேரைக் காப்பாற்றும் என்பது அதன் உயரத்தைப் பொறுத்தது. அடிப்படையில் கலசங்கள் இடிதாங்கிகள். உதாரணமாக கோபுரத்தின் உயரம் ஐம்பது மீட்டர் என்றால் நூறு மீட்டர் விட்டம் அடைக்கும் பரப்பில் எத்தனை பேர் இருந்தாலும் அவர்கள் இடி தாக்காமல் காக்கப்படுவார்கள். அதாவது சுமார் 7500 சதுர மீட்டர் பரப்பில் இருக்கும் மனிதர்கள் காப் பாற்றப்படுவார்கள் !!!!.

சில கோயில்களுக்கு நான்கு வாயில்கள் உள்ளன, அது நாலாபுறமும் 7500 சதுர மீட்டர் பரப்பளவை காத்துக்கொண்டு நிற்கிறது!!! இது ஒரு தோராயமான கணக்கு தான், இதை விட உயரமான கோபுரங்கள், இதை விட அதிகமான பணிகளை சத்தமில்லாமல் செய்து வருகின்றது!! பிரம்மிப்பு !!!

அதெப்படி என்று கேட்கிறவர்கள் படத்தைப் பார்க்கவும். இதை எல்லாம் பார்க்க போனால் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழி தான் நினைவுக்கு வருகின்றது.

சும்மாவா சொன்னாக பெரியவங்க !!!

**மகேந்திரன் சக்திபாலன்.** முகப்புத்தகத்தில் புதைந்துகிடந்த தத்துவம்.

# நம் முன்னோர்களின் ஞானம்!





நமது குடும்பப்பெண்கள் வீட்டி சமைக்கும் முறை. குறிப்பாக ஆட்டுக்கல்லில் மாவு ஆட்டி அதை வழித்தெடுப்பதும், மொத்த வீட்டையும் கூட்டுவதும், பின் கொல்லைப் புறத்தில் உள்ள கிணற்றின் சகடையில் நீர் இறைப்பதும், துணி துவைப்பதும் என்கின்ற அடுக்கடுக்கான செயல்பாடுகள்... இவை ஒவ்வொன்றுமே ஒரு வித உடற்பயிற்சி.

துணி துவைப்பது கைக்கும் விரல்களுக்கும் பயிற்சி என்றால், தண்ணீர் இழுப்பது மூச்சுப்பயிற்சியாக அமைகிறது.வீடு கூட்டுவது இடுப்புக்கு பயிற்சியளிக்கிறது. இவ்வளவையும் செய்துவிட்டு இறுதியில் பூஜை அறையில் நெய்விளக்கேற்றி வழிபடுவது என்பதுதான் உச்சக்கட்டம்.
நெய்விளக்கு, நைட்ரஜன் ஆக்சைட் கதிர்களை வெளியேற்றுகிறது. அது பரவும் இடத்தில் தவறான அணுக்கதிர் வீச்சுக்கு இடமேயில்லை. இப்படிப்பட்ட பெண்களின் கர்ப்பப்பை மிகவும் வலிமையுடையதாகவும் செறிவோடும் இருப்பதுதான் சிறப்பு.இதனால் இவர்களின் கருப்பைகளில் உருவாகும் குடும்ப வாரிசுகளின் ஆரோக்கியத்தில் ஒரு குறையும் இருக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது.
இப்படிப்பட்ட பணிகள் எதுவும் செய்யாமல் டி.வி.பார்ப்பது, சாப்பிடுவது, தூங்குவது என்றாகி விட்ட பெண்களின் கருப்பைகள், மயோமா என்னும் கட்டிக்கு இடமளித்து இரத்தப் பெருக்கையும் உருவாக்கி ஒரு கட்டத்தில் கர்ப்பப்பையையே வெட்டி எடுத்துவிட வேண்டி வந்து விடுகிறது.

பெண்மையின் ஆதார சக்தியும் ஆக்க சக்தியும் கர்ப்பப்பையின் சரியான செயல்பாட்டில்தான் உள்ளது.அதன் ஆரோக்கியத்தை மையமாக வைத்தே அவர்களை வீட்டு வேலைகளில் ஈடுபடுத்திய நம் முன்னோர்களின் ஞானம், மேலை நாட்டவரை பெரிதும் வியப்பில் ஆழ்த்தியது.

Bald in Bonnbeuel நகரத்தில்

எமது புதிய கிளை ஸ்தாபனம் !

T.T.S.Brothers GmbH&Co.KG

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846
Asien Supermarkt

ஆயிரக்கணக்கான வாடிக்கையார்களின்
வேண்டுதலுக்கு இணங்க
எமது கிளை ஸ்தாபனம்
53227 Bald in Bonnbeuel நகரத்தில்
Johannesstr.35 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது
என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.


உங்கள் வீட்டு தேவைக்கான
அனைத்து மளிகை பொருட்கள்-
ஆடை அணிகளன்கள் மற்றும்
உங்கள் உறவுகளுக்கு பணம்
அனுப்புவது முதல் அனைத்து
தேவைகளுக்கு
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

# இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் வந்த தமிழ் இலக்கியங்களில் ஓசோன் !




தற்கால அறிவியல்அறிஞர்களால்புவிக்கு மேலே இருக்கும்வான்வெளி ஆறு பகுதி களாகப்பகுக்கப்பட்டுள்ளது.

புவியில் இருந்து ஒன்றன்மேல் ஒன்றா கட்ரோபோஸ்பியர் (troposphere) ஸ்ட் ரோட்ஸ்பியர்(stratosphere) மீஸோஸ் பியர் (mesosphere) தெர்மாஸ்பியர் (thermos phere)எக்ஸோஸ்பியர் (exosphere) நத் திங்னஸ் (nothingness)எனஅவை அமைந் துள்ளன.இவற்றுள்புவிக்கு மேலே முதலில் அமைந்திருப்பது ட்ரோபோஸ்பியர்.இது வான் வெளியின்மொத்த கன அளவில் பதினேழில் ஒரு பங்குதான். ஆனால், வான்வெளியில் உள்ளமொத்தக் காற்றின் அளவில் ஐந்தில் நான்கு பகுதி இங்கு தான் இருக்கிறது.

இன்றைக்கு ஏறத்தாழ 2,000ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்கள்வான் வெளியை ஐந்து கூறுகளாகப்பிரித்துக் கூறி இருப்பதை அறியும்போது வியப்பும்மகிழ்வும், பெருமி தமும் ஒருங்கே உண்டாகின்றன.

"இரு முந்நீர்க் குட்டமும் வியன் ஞாலத்து அகலமும்வளிவழங்கு திசையும் வறிது நிலை இயஆகாயமும்." (புறநா - 20)என்னும் வரிகளில் புவிக்கு மேல் உள்ள மூன்று பகுதிகள்கூறப்பட்டுள்ளன.

"செஞ்ஞாயிற்றுச்செலவும்அஞ்ஞாயிற்றுப் பரிப்பும் சூழ்ந்த மண்டிலமும்வளிதரு திசையும் வறிதுநிலை காயமும்." (புறநா - 30)என்னும் வரிகளால்புவிக்கு மேல்ஐந்து பகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

"மயங்கிருங் கருவியவிசும்பு முகனாக இயங்கிய இருசுடர்கண்ணெனப் பெயரிய வளியிடை வழங்கா வழக்கறு நீத்தம்."

(புறநா -365) என்னும் வரிகளில்இரண்டு பகுதிகள் குறிப்பிடப் பட்டுள்ளன. இவற்றுள் "திசை"என்னும் பகுதியில் காற்று இருக்கும். "ஆகாயம்", "நீத்தம்" என்னும் பகுதிகளில் எதுவும்இருக்காது எனவும் கூறப்பட் டுள்ளது. "நீத்தம்"என்பது இன்றைய அறிவியலார் கூறும்"வெறுமை" (நத்திங்னஸ்) என்னும் பகுதி. புவிக்கு மேல் இருக்கின்ற இரண்டாவது பகுதியான "ஸ்ட்ரோட்ஸ்பியர்" என்னும் பகுதியில் தான் "ஓசோன்"எனப்படும் காற்றுப்படலம் அமைந் துள்ளது. இப்படலம் கதிரவனிடம் இருந்து வரும் கடும் வெப்பத்தை, தான்தாங்கிக்கொண்டு புவியில் உள்ள உயிர்கள் துன்பம் உறாமல் காத்து வருகிறது.

20ஆம்நூற்றாண்டின் பிற்பகுதியில்கண்டு பிடிக்கப் பட்ட இந்த ஓசோன் படலத்தைப்பற்றி 2ஆம் நூற்றாண்டில்வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் குறிப் பிட்டிருப்பது வியப்பை அளிக்கிறது அல்லவா?


"நிலமிசை வாழ்வர் அலமரல்தீரதெறு கதிர் வெம்மை கனலி தாங்கிகாலுண வாகசுடரொடு கொட்கும்அவிர்சடை முனிவரும் மருள." (புறநா - 43)

என்னும் பாடல் வரிகளின்கருத்து, "புவியில்வாழும் மக்களின் துன்பம்தீர கதிரவனின் வெப்பம்மிக்க கனலைத்தாங்கிக்கொண்டு கதிரவனோடு சேர்ந்து சுழல்கின்றமுனிவர்கள்" என்பதாகும்.

மேலும், முருகக்கடவுளின் ஒரு கை,"விண்செலல் மரபின்ஐயர்க்கு ஏந்தியது" என்று திருமுரு காற்றுபபடை (107) யிலும்,"சுடரொடு திரிதரும் முனிவரும், அமரரும்இடர்கெட அருளி நின் இணையடி தொழுதோம்"என சிலப்பதி காரத்திலும் (வேட்டுவ வரி - 18)

இக்கருத்து கூறப்பட்டுள்ளது .முனிவர்கள்என்று கூறப்பட்டதாலேயே, மற்ற மதத்தினரும பகுத்தறிவுவாதிகளும் இது அறிவியல் கருத்தன்று கற்பகமரம்,காமதேனு போன்றகற் பனைகளுள் ஒன்று தான்என்று சொல்லக் கூடும். முனிவர்கள் என்றாலும்சரி அல்லது பிறவற்றைச் சுட்டினாலும் சரி அது ஒரு பொருட்டன்று. கதிரவனின் வெப்பத்தைத்தாங்கிக் கொள்ளும்ஒரு சக்தியைப் பற்றித்தமிழர்கள் (சங்கப்புலவர்கள்) சிந்தித்திருக் கிறார்கள் என்னும்செய்தி நாம் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே கூறி விட்டோம் என்று நினைக்கும்போது, விஞ்ஞானத் தையும் மிஞ்சிய அறிவாற்றல் தமிழர்களின் மெய்ஞானத்திற்கு இருந்துள்ளது என்று மகிழ்வோமாக.

# மாணவர்களுக்கு மகாத்மாவின் மடல்!




காந்தியவாதியும் கோடீஸ்வரருமான சேத் ஜம்னாலால் பஜாஜின் மூத்த புதல்வர் கமலநயன் மேற்படிப்புக்காக வெளிநாடு செல்லுமுன் காந்தியடி களிடம் ஆசீர்வாதம் பெறச் சென்றார். அங்கு காந்தியடிகள் மௌனவிதம் இருந்துகொண்டிருந்தார். எனவே ஒரு காகிதத்தில் தனது ஆசியைத் தெரிவித்தார். அந்த மடலில் காந்தியடிகள் எழுதியிருந்தது....

**1) குறைவாகப் பேசு**
**2) எல்லோரும் சொல்வதைக் கேள், எது சரியோ அதைச் செய்.**
**3) ஒவ்வொரு நிமிடத்தையும் வீணாக்காதே, குறிப்பிட்டகாரியத்தை குறிப்பிட்ட காலத்தில் செய்.**
**4) ஏழையைப் போல் வாழ், பணக்காரன் என்று பெருமைப்படாதே.**
**5) செலவு செய்யும் ஒவ்வொரு சதத்திற்கும் கணக்கு வைத்துக்கொள்.**
**6) கருத்தோடு படி.**
**7) தினந்தோறும் முறையாக உடற்பயிற்சி செய்.**
**8) உணவு விசயத்தில் ஜாக்கிரதையாக இரு.**
**9) நாட்குறிப்பு எழுது.**
**10) புத்திசாலித்தனத்தை விட இதய பலமே கோடி மடங்கு பெரியது. எனவே அதனைவிருத்தி செய். அதற்கு கீதை, இராமாயணம் முதலியவற்றை படிப்பது இன்றியமையாதது.**
**11) தினந்தோறும் முறையாக இரண்டு முறை பிரார்த்தனை செய்.**
**12) ஒவ்வொரு வாரமும் நீ செய்யும் காரியங்களை குறித்து எனக்குக் கடிதம் எழுது.**

காந்தியின் ஆசீர்வாதம், மகாத்மாவின் கடிதம் கமலுக்கு மட்டுமல்ல, இதைப் படிக்கும் எல்லா மாணவ மாணவியருக்குந்தான். யாவற்றையும் அனுபவித்து அனுபவம் பெறவேண்டும் என்றால் நம் ஆயுள்காலம் போதாது. எனவே நல்லவர்களது அறிவாளிகளது அனுபவங்கள் நம்மை விரைவாகவே நல்வழிப்படுத்தி வாழ்வைச் செம்மையுற வைத்துவிடும்.


**இரத்தினம் ஜோதிட நிலையம்**
- சோஸ்ற்-

S.Kanagaratnam
Hafer Winkel-3
59494 Soest-Germany




பரம்பரை பரம்பரையாகக் காப்பாற்றி வந்த சோதிடக்கலையின் நுட்பமான கணிப்பின்மூலம் உங்கள் குழந்தையின் ஜனன ஜாதகம் எழுத ருது, ஜாதகம் எழுத, திருமணப் பொருத்தம் பார்க்க இருக்கும் ஜாதகத்தின் பலன் அறிய, நன்மை தீமைகளை அறிந்துகொள்ள, பொருத்தமான காலமறிந்து முன்னேற்றமான வேலைகளை ஆரம்பிக்க.......

சோதிட வல்லுனர்
சந்திரசேகரம் கனகரெத்தினம் (Dip.A.G)
எங்கள் புதிய இலக்கம்:
**Tel: 02921-3690003**

# ’சகிப்புத்தன்மை“ முதியோர் இளையோருக்கு வாழ்ந்துகாட்டும் வாழ்க்கைப்பாடம்!

**தேவை உணர்ந்து தானே செய்யும் நிலை இன்றைய சூழலில் குடும்பங்களில் இல்லை!**




மூத்தவர்களே! இளையவர்களாகிய எங்களை வளர்த்து ஆளாக்கியயவர்களே!
சின்னஞ்சிறு விதையாக விழுந்த நீங்கள் இன்று முதிர்ந்த சுவையும்,பயனும் தரும் கனியாகி யுள்ளீர்கள்.
முதுமை ஒரு சாபம், சுமை என்று எல்லாம் கருத வேண்டாம். நேற்றைய நல்ல நினைவு களில் மகிழவும், இன்றைய நிகழ்வுகளை நிறை வுடன் ஏற்கவும். நாளைய தினத்தை நம்பிக்கை யுடன் எதிர்கொள்ளவும் நீங்கள் பக்குவப் படுங்கள்.
உங்கள் சிரிப்பு உங்கள் சலிப்பை மட்டுமல்ல எங்கள் சலிப்பையும் போக்கும். சோர்வை மறந்து சுறுசுறுப்பாகக் காட்சியளியுங்கள்
தனிமையை ஏற்கவும் ரசிக்கவும், பயனுள்ள தாக்கவும் முயலுங்கள்.
உங்கள் வீட்டுக் குழந்தைகள் உங்களை நேசிக்க வேண்டுமா? அவர்களுக்கு ஒரு கதை கூறுங்கள். இளைஞர்களுக்கு உங்கள் அனுபவப் பின்னணி யைச் சுவையாக எடுத்துரையுங்கள்.
ஒவ்வொரு மனிதனும் ஒரு சரித்திரம்தான். அவர்கள் சாதிப்பதுண்டு. உயர் விழுமி யங்களை உங்களிடம் இருந்து உங்கள் வாரிசுகள் கற்க வழிகாட்டுங்கள். விபரீத கற்பனைகளும், எதிர்மறைச் சிந்தனைகளும் அமைதியையும் தூக்கத்தையும் கெடுக்கும்.
அவற்றைத் தவிர்த்து நேர்முகச் சிந்தனையும் தன்னம்பிக்கையும் பெருக்கிக்கொள்ளுங்கள்.
வீட்டிற்குள்ளேயே முடங்கிக்கிடக்காதீர்கள். காலை மாலை காற்றாட நடந்து செல்லுங்கள். உங்கள் வயதை ஒத்தவர்களுடன் பேசி மகிழுங்கள்.
60 வயதில் பணி ஓய்வு பெறுவது பணிக்கு மட்டும்தான். 80 வயதிலும் உங்கள் திறமை யால் அடுத்தவருக்கு உதவலாம். உங்களை நீங்கள் முழுமையான ஈடுபாட்டுடன் வைத்துக் கொள்ள லாம்.
உங்களைவிட வயது முதிர்ந்தவர்களுக்கு நம்பிக்கையூட்டி உற்சாகப் படுத்துங்கள்.
வீட்டில் உண்டாகும் சின்னச் சின்ன முரண்பாடு களை சுமூகமாக தீர்த்து ஒற்றுமையுண்டாக் கும் இணைப்புப் பாலமாகவே இருங்கள்.
சகிப்புத்தன்மையையும், பொறுமையையும் நல்ல எண்ணங்களையும் குடும்பத்தினர் உங் களிடம் இருந்து கற்கட்டும்.
அமைதியும் கம்பீரமும் முதுமை அழகிற்கு அழகு சேர்க்கும் என்பதை உறுதிப்படுத் துங்கள்.
சகிப்புத்தன்மை முதியோர் இளையோருக்கு வாழ்ந்துகாட்டும் வாழ்க்கைப் பாடம்.
உங்களைவிட வயதுகுறைந்த நண்பர்களுடன் சில மணிநேரம் செலவிடுங்கள். மனதிற்குச் சிறந்த காயகல்பம்.
குடும்ப உறவினர்களுக்கு சிறு சிறு உதவிகள் ஒத்தாசைகள் செய்து கொடுத்து உங்க ளுடைய தேவைகளை உணர்ந்து அங்கீகரிக் கச் செய்யுங்கள். சுயபச்சாதாபம் முதுமையின் எதிரி. அதனை விரட்டுங்கள்.
குடும்பத்தினரின் குறைகளை அவர்கள் மனம் புண்படாதபடி அவர்கள் ஏற்றுத் திருத்திக் கொள்ளும் விதமாகக் கூறுங்கள்.

தொடர்ச்சி 31ம் பக்கம்

**சுவாமி விவேகானந்தரின போதனைகள் ஓர் சர்வதேச வன்முறை நிவாரணி!**

10ம் பக்கத் தொடர்ச்சி

மற்ற உலக செல்வங்களெல்லாம் உங்களை வந்து சேரும். நமது முழு மனதையும் இறைவன் பால் செலுத்த வேண்டும்.
கடலைத் தேடி ஓடும் நதிகளில் அசுத்தங் களும், மலர்களும் கலந்தே இருக்கும். எல்லாமே அடைவது கடலின் மடியில் தான் !

என்னிடம் உண்மையாய் இருப்பது கடவுள். கடவுளில் உண்மையாய் இருப்பது நான், இந்த உண்மை கடவுளுக்கும் மனிதனுக்கும் இடை யேயான இடைவெளியை நிரப்புகிறது.

இறைவனை அறிவதன் மூலமாக நமக்குள் இறை அரசு வர வழிவகை செய்கிறோம். எனும் விவேகானந்தரின் தத்துவங்கள் ஆன்மீகத்தின் வெளிச்ச விழுதுகள்.

இன்றைய உலகம் விவேகானந்தரைக் கொண்டாடுகிறது.
ஆனால் அவருடைய சிந்தனைகளை வாழ்க் கையில் கொள்வ தில்லை.
அவரை வெறுமனே வழிபடவோ, அல்லது அவரைக் குறித்துப் பெருமைப்படவோ மட்டுமே உலகம் தயாராய் இருக்கிறது.

அவருடைய சிந்தனைகள் மனித இதயங்களில் பாயத் துவங்கினால் வாழ்க்கை நிச்சயம் வசீகரமாய் மாறும் என்பதில் ஐயமில்லை.

அவரே சொல்கிறார். “நீ சுயநலமற்றவனா ? உனக்குச் சுயநலம் இல்லாவிட்டால் நீ எந்த மதப் புத்தகங்களையும் வாசிக்கத் தேவை யில்லை. எந்தப் புனிதத் தலத்துக்கும் செல்லத் தேவையில்லை. நீ மிகச் சரியான வாழ்க்கை வாழ்கிறாய்” !

தன்னலம் அற்றவன் தனது செல்வங்களைப் பகிர்ந்து கொள்கிறான். அதைத் தனக்கென வைத்துக் கொள்வதில்லை.

தன்னலம் அற்ற வன் தனது சுகத்துக்காக பாலியல் அத்து மீறல்கள் செய்வதில்லை. ஆசைகளின் கதவைத் திறந்து அநீதிகளுக்கு அழைப்பு விடுப்பதில்லை.
அவன் பிறருக்கான வாழ்க்கை வாழ்கிறான். பிறருடைய மகிழ்ச்சி, சந்தோசம், நிறைவு போன்றவையே அவனுடைய மனதை ஆக்கிர மிக்கின்றன.

இப்படிப் பட்ட சுயநலம் அற்ற மனிதர்கள் நிரம்பும் உலகம் அழகாகிவிடுகிறது.

அதன் பின்னர் வழிகாட்டுவதற்கு மகான்களும் தேவையில்லை, மதங்களும் தேவையில்லை. தோண்டத் தோண்ட சிந்தனையை விரி வடையச் செய்யும் விவேகானந்தரின் இந்தப் போதனை ஒன்றே போதுமானது சர்வதேச வன்முறை நிவாரணியாக !

இது விவேகானந்தரின் 150வது நினைவு ஆண்டு

வெறும் நினைவு ஆண்டாக இது கடந்து போவதில் எந்த அர்த்தமும் இல்லை !

இந்த ஆண்டு நமது நினைவிலிருந்து அகன்று போகாத ஆண்டாக மாற வேண்டும். அதற்கு விவேகானந்தரின் இந்த சிந்தனை நமக்குள் பதியமிடப்பட்டு வளரவேண்டும். அப்படி நிகழ்ந்தால் மானுடம் மகிழ்வாகும், மனிதம் வலுவாகும் !

StaR-Impex

யேர்மனியில் புகழ்பெற்ற



மொத்த விற்பனை நிலையம்

மளிகைப் பொருட்கள் மரக்கறிவகைகள் நேரடி இறக்குமதியாளர்கள்....

Kipperstr. Tor 3
44147 Dortmund

Tel.: 0231/8602696
Mobil: 0172/2183703
Fax: 0231/8602698
E-Mail: star-impex@live.de

Lebensmittel Groß- & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00

# கோலங்கள்



வாசலில் சாணி தெளித்து சுத்தம் செய்வதால் கிருமிகள் அண்டுவதில்லை.அதன் மேல் சூரிய ஒளி படும்போது ஜீவ வாயுக்கள் உருவாகின்றன. அதோடு அரிசி மாவால் புள்ளிகள் வைத்து கோலமிடுவது கணக்கு போடுவது போல ஒரு செயல்.அது மறைமுகமாக திட்டமிட்டு எதைச் செய்தாலும் அது அழகாக முடிந்து மனதுக்கும் நிறைவைத்தரும் என்கிற ஓர் உண்மையை ஆழ்மனதில் புதைக்கிறது. அனைத்திற்கும் மேலாக கட்டை விரலும், ஆள்காட்டி விரலும் ஒன்று கூடி கோலமாவை எடுத்து வளைந்து நெளிந்து கோலம் போடும்போது உடம்பும் பலமுறை குனிந்து நிமிர்ந்திட அதுவே மறைமுகமாக ஒரு யோகாசனப்பயிற்சி போல அமைந்துவிடுகிறது.

இறுதியாக கோலமாவுத் துணுக்குகளை மறு தினத்துக்குள் பல எறும்புகள் தங்களுக்கான உணவாக கருதி எடுத்துச் சென்று விடுவதால் வீட்டு வாசல் என்பது கலா ரூபம், சுகாதாரம், உயிர்களுக்கு உதவும் அன்னக்கூடம் என்று மூன்று விதத்தில் சிறப்படைகிறது. **வீட்டு வாசலிலேயே இவ்வளவு சிறப்புகள் அமைந்தால் வீட்டினுள் எவ்வளவு சிறப்புகள் இருக்கும்?**

## முதலாவது பிறந்ததின வாழ்த்து!

இனிய பிறந்த தின வாழ்த்துக்கள்
இங்கிலாந்து போண்.மவுத்தை இருப்பிடமாகக் கொண்ட ஜெயரூபன் கவிதா தம்பதியினரின் செல்வப் புதல்வி
**சாதனா ஜெயரூபன்** 08. 03. 2013ல் தனது முதலாவது பிறந்ததினத்தை அப்பா அம்மா அப்பம்மா மாமாக்கள் மாமிமார்கள் உறவினர்களுடன் சேர்ந்து கொண்டாடுகின்றார்.
இவரை பூட்டி அம்மம்மா சித்தி மாமா குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் நல்லருட் செல்வத்துடன் பல்கலைச் செல்வங்கள் பெற்று ஆரோக்கிய வாழ்வு வாழ உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள்.







**S.K.Silks & Gold Paraadise**

**டோட்மூண் நகரில் மாபெரும் ராஜ முத்திரை!**

என்றும் புதியது
அழகின் இரகசியம் அது!

**Tel:0231 9501 647**

**பட்டுச் சேலைகளுக்கும் தங்க நகைகளுக்கும் நாடுங்கள்...**

Mr.P.Sritharan
Proprietor

**Adler str 33 - 44137 Dortmund**

# திருவாசகமும் வள்ளலாரும்

வள்ளலார் திருவாசகத்தை வழிபடு நூலாகக் கொண்டதுடன், வள்ளலார் தனது ஒன்பது வயதில் வழிபடு கடவுளாக முருகனையும் வழிபடு குருவாக சம்பந்தரையும் வழிபடு நூலாக திருவாசகத்தையும் ஏற்றார். இவ் அமைப்பு இளைஞர் இராமலிங்கத்தை பின்னர் அருட்பிரகாச வள்ளலாராகப் பிரகாசிக்கச் செய்தது. வள்ளலாரை உருவாக்கிய நூல்கள் திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் என்பன ஆகும். திருவாசகம் முழுவதும் வள்ளலாருக்கு மனப்பாடம். இல்லறத்தை விரும்பாத வள்ளலாருக்கு வற்புறுத்தி திருமணம் செய்ய முதல் இரவு முழுவதும் மணப் பெண்ணை அருகில் இருத்தி திருவாசக பாராயணத்தை தொடங்கினார். அன்று இரவு முழுவதும் திருவாசக முற்றோதலில் ஈடுபட்டனர். இவ்வளவு தான் வள்ள லாரின் இல்லறம் அம்மையாருக்கு இதுவே உபதேச மாய் தனித்திருந்து தவவாழ்வு வாழ்ந்து பெறவேண்டும் என்ற பேற்றை பெற்றார்.

மாணிக்கவாசகர் திருவாசகத்தை உருக்கத்திலும் வள்ளலார் திருவாசகத்தை பற்றியதால் தான் இரக்கத்தில் சிறந்த திரு அருட் பாவை உருவாக்கினார். அம்மையே அப்பா ஒப்பிலாமணியே அன்பினில் விளைந்த ஆரமுதே” என்கிறது. திருவாசகம் அன்பினில் உருகி கருணையில் கசிந்து கசிந்து கடவுள் இன்பத்தை பெறவேண்டும்.

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதியை வள்ளலார் சோதியாகக் காண்பார். கேழிப் பரஞ்சோதி, கேழிப் பரங்கருணை என்கிறது திருவெம்பாவை. இதில் பரஞ்சோதி, பரங்கருணை எனும் பெருஞ்சோதி பெருங்கருணையை அருட்பெருஞ்சோதி தனிப்பெரும் கருணை எனக் காண்பர்.

ஜோதி என்பது கடவுளின் வடிவம், கடவுளின் எண்ணம். கருணை என்பது குணம். கருணையைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் ஜோதியாகிய கடவுளைக் காணலாம். கடவுளின் மயமாகவே நாம் ஆகலாம். இதுவே “அருட்பெரும் சோதி தனிப்பெரும் கருணையின் தத்துவமாகும்.

“வான் கலந்த மாணிக்க வாசக, நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால், நற்கருப்பஞ்சாற்றினிலே தேன் கலந்து.... என்பதை வள்ளலார் பாடிப்பாடி அனுபவித்த விடயம் திருவாசகத்தை பாடும்போது கலந்துவிடவேண்டும். கருப்பஞ்சாற்றில் தேன் கலந்து பால் கலந்து, செழும் கனித்தீஞ்சுவை கலந்து இதை மேலாக கொண்டு “எனது ஊன் கலந்து” அதற்கு மேல் உயிர் கலந்து எல்லாம் சேர்ந்த இத் திருவருட் திருவாசகக் கலவை எப்படி இருக்குமென அப்படி பாடும்போது உடலும், உயிரும் கலக்க வேண்டும். திருவாசகம் பாடும் பக்குவம் பக்திப்பாடல், பிரார்த்தனை பாடல் எல்லாவற்றுக்கும் பொருந்தும்.

சாதி, மதம் வேறுபாடு கடந்த ஆன்மநேய ஒருமைப்பாடு உரிமையை கடைப்பிடிப்பது வள்ளலார், மாணிக்கவாசகர் “சாதிகும் என்னும் சுழிபட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை” என்றார்.

**கு. கோபிராஜ்**
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

# அந்த உருவம்



**- கே.எஸ்.சுதாகர்**

அனேகமான கோடை விடுமுறையின்போது நாங்கள் மெல்பேர்ணிலிருந்து சிட்னி போய் வருவது வழக்கம். காரை எடுத்தால் சிட்னி போக பதினொரு மணித்தியாலங்கள் போதும்.

"மெல்பேர்ண் திரும்ப முன்னர் ஸ்ரீ வெங்கடேஸ்வரர் ஆலயத்தை ஒருதடவை தரிசித்துவிட்டுப் போங்கள்" என்று எனது சிட்னி நண்பன் ராஜா சிட்னி போன முதல்நாளே சொல்லியிருந்தான். விருப்பம் என்றால் தானே கூட்டிச் செல்வதாகவும் சொல்லியிருந்தான். ஸ்ரீ வெங்கடேஸ்வரர் ஆலயம் வொலங்கொங் (Wollongong) என்ற இடத்திற்குப் போகும் வழியில் ஹெலன்ஸ்பேர்க் என்ற நகரில் இருக்கின்றது. சிட்னியில் முதன்முதல் ஆகமநெறிப்படி கட்டப்பட்ட கோவில் இது. இங்கு சிவனுக்கு ஒரு கோவில் தொகுதியும் விஷ்னுவிற்கு ஒரு கோவில் தொகுதியும் என சைவ வைஸ்ணவக்கோவில்கள் ஒரே இடத்தில் உள்ளன.

அங்கு நின்ற நாட்களில் சிட்னி கார்பர், ஒப்ரா ஹவுஸ், ஒலிம்பிக் பார்க், முருகன் கோவில் என்று சிட்னியில் போக வேண்டிய எல்லா இடங்களிற்கும் போயிருந்தோம். வொலங்கொங் கோவிலிற்கு மாத்திரம் போகவில்லை.

நாளைய தினம் மீண்டும் மெல்பேர்ண் புறப்படுகின்றோம். அதற்கிடையில் அருகே ஒருமணித்தியாலம் கார் ஓடும் தூரத்தில் இருக்கும் பூங்கா ஒன்றிற்கு போக விரும்பினோம்.
பூங்காவை அடைந்தபோது மதியமாகி விட்டது. நாங்கள் மொத்தமாக பத்துபேர் மட்டில் இருந்தோம். பூங்காவில் எங்களைத் தவிர வேறு இரு குடும்பத்தவர்கள் இருந்தார்கள். அவர்களும் ஏறக்குறைய அவ்விடத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். பூங்கா வெறிச்சோடிக் கிடந்தது. அனைவரும் நாங்கள் கொண்டுவந்த தரைவிரிப்புகளை புல்தரையில் விரித்துவிட்டு கொண்டுவந்த பொருட்களைப் பரப்பி அமர்ந்தோம். சிறுவர்கள் அங்குமிங்குமாக ஓடி பூங்காவை அமர்க்களமாக்கிக் கொண்டிருந்தனர். சும்மா மலையாகக் கிடந்த நிலத்தை வெட்டி சமதரையாக்கி பூங்காவாக அமைத்திருக்க வேண்டும். ஒருபக்கம் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ஓடும் நீரைவிட தேங்கிக் கிடந்த அழுக்கு நீரே அங்கு அதிகம். மறுபுறம் புதர். இடையிடையே பிள்ளைகள் விளையாட சறுக்கீஸ் ஊஞ்சல் என பூங்கா பசுமையாக இருந்தது.

சிறுவர்கள் மலைச்சரிவு மீது ஏறி, பின்னர் அங்கிருந்து சரிவுமீது வேகமாக ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்களைக் கட்டுப்படுத்தாவிடில் ஆற்றினுள் போய் விழவேண்டியதுதான். சிறிது நேரம் அவர்களுடன் விளையாடிவிட்டு, மறுபுறத்தில் இருந்த இருக்கைகளை நோகிச் சென்றோம். இருக்கைகளை அடைவதற்கு நீண்டதொரு சரிவுமீது ஏறவேண்டியிருந்தது. சரிவின் அருகே பெரியமரங்கள் சடைத்திருந்தன. அங்கே மரத்தாலான சில மேசைகளும், அதைச் சுற்றி வாங்குகளும் இருந்தன.

மதியச்சாப்பாட்டை ஆரம்பித்தோம். சுவையான சாப்பாடு. கண் மூடி முழிக்கும் நேரம்.
ரிஷி கீழே விழுந்துவிட்டான்" என்று கத்தினான் தீபன். அவன் காட்டிய திசையில் எட்டிப் பார்த்தேன். ஒரே இருட்டு. நாங்கள் மேலே ஏறிவந்த சரிவின் அருகேயுள்ள பள்ளம் அது. அதன் ஆழம் குறைந்தது பத்து மீற்றராவது இருக்கும். கீழே என்ன இருக்கின்றது என்பது தெரியாமல் மரங்கள் அடர்ந்திருந்தன. செய்வதறியாது அந்தச் சரிவுமீது கீழே ஓடினோம்.

ரிஷி தான் அணிந்திருந்த ஷு ஒன்றுடன் பள்ளத்திற்குள்ளிருந்து வெளியே வந்து கொண்டிருந்தான். நெற்றியிலிருந்தும் நாடியிலிருந்தும் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. கூட வந்தவர்கள் முகத்திலிருந்து வழியும் இரத்தத்தைத் துடைத்து காயத்திற்குக் கட்டுப் போட்டார்கள்.

"என்ன நடந்தது? ஏன் விழுந்தாய்?"
"விளையாடிக் கொண்டிருக்கேக்கை விழுந்து போனேன்."



“ஏதாவது ஹொஸ்பிற்றல் கிட்ட இருக்குதா?” கூட வந்தவர்களிடம் மனைவி கேட்டாள். அவர்கள் இல்லை என்றார்கள். திரும்பவும் புறப்பட்ட இடத்திற்குத்தான் போக வேண்டும்.

“அப்பா... நான் கீழே விழுந்து கொண்டிருக்கேக்கை ஏதோ ஒரு பெரிய உருவம் என்னைப் பிடிச்சு தள்ளிவிட்டது. இல்லாவிட்டால் கீழேயிருந்த றொக்கிலை அடிபட்டிருப்பன். கீழே போய்ப் பாருங்கள் பெரிய பெரிய கல்லுகள் எல்லாம் இருக்கின்றன.”

நான் அந்தப்பற்றைக்குள் சென்று கொண் டிருக்கும் போது, “அப்பா என்ரை மற்ற ஷீவையும் தேடி எடுத்து வாங்கோ” என்றான் ரிஷி.

எங்குமே மரக்கொப்புகள் நீட்டிக் கொண் டிருந்தன. கீழே கூரான பெரிய பாறாங் கல்லுகள். ஒரேயொரு சிறிய இடம் மாத்திரம் வெறுமையாக கல்லுகள் இல்லாமல் இருந்தது. மரத்தின் கிளை ஒன்றில் 'நைக் ஷூ' தொங்கிக் கொண்டி ருந்தது. அது அவனது பிறந்தநாள் பரிசாக வாங்கியது.

அதை எடுத்துக் கொண்டு அந்த இடத்திலிருந்து விரைவாக நகர்ந்தோம். ஹொஸ்பிற்றலில் அவனது நாடிக்கு இழை போடவேண்டியிருந்தது.

அன்று முழுவதும் தன்னைக் காப்பாற்றிய அந்த உருவம் பற்றியே கதைத்துக் கொண்டிருந்தான் ரிஷி. எங்களுக்கும் அந்த நிகழ்ச்சி வியப்பாகத்தான் இருந்தது.

அடுத்தநாள் காலை மெல்பேர்ண் புறப்பட் டோம். வொடொங்கா என்ற இடத்தை அண்மித்து விட்டோம். இன்னும் நான்கு மணித்தியாலம் கார் ஓடவேண்டும். இரு மருங்கிலும் இருந்த அடர்ந்த மரங்கள் காடு போன்ற தோற்றத்தைக் கொடுத்தன. முன்னாலே வானத்தில் கருமுகில் கூட்டங்கள். திரும்பவும் நேற்றைய சம்பவம் நினைவுக்கு வந்தது.

“உண்மையாகவே ஒரு உருவம் உன்னைப் பிடிச்சுத் தள்ளிவிட்டதா?”

அம்மா மகனிடம் கேட்டாள்.

“அம்மா... அது கடவுள்” என்றான் மகன்.

“நான் இதை நம்பமாட்டேன்” என்றாள் அம்மா.

வானத்திலே இருந்த முகில்கூட்டங்களில் ஒன்று சற்று வித்தியாசமாக தோற்ற மளித்தது. அது ஒரு கடவுளின் திருவுருவமாக எனக்குக் காட்சி தந்தது.

“அங்கே பாருங்கள்.... கமராவை எடுங்கள்.”

மனைவியும் மகனும் அந்த உருவத்தைப் பார்த்து வியந்தபடியே கமராவைத் தேடினார்கள். கமரா கைக்குக் கிட்டியபோது அந்த முகில்கூட்டம் முற்றாகக் கலைந்திருந்தது.

அடுத்த வருடம் நாங்கள் சிட்னிக்குப் போன போது, முதல் காரியமாக ஸ்ரீ வெங்கடேஸ்வரர் ஆலயத்தைத் தரிசித்தோம்.







# சின்னஞ்சிறு பெண்போலே சிற்றாடை இடை உடுத்தி

## சாத்துப்படி எனும் அற்புதக் கலையில் நம்மை மகிழ்விக்கும் இளம் கலைஞர்கள் சங்கர்ஷண் சர்மா,சிவதனுஷ் சர்மா

கடந்த 14.01.2013 தைப்பொங்கல் திருநாளில் யேர்மனியில் சுவற்றா ) ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயத்தில் சிறப்பு பூஜை இடம் பெற்று அம்பாள் உள் வீதி உலா வந்தார்.

தாயகத்தில் அன்று ஆலயங்களுக்குச் சென்ற போது எம்மை மெய்மறக்கச் செய்வது ஆண்டவனின் திருவுருவமும், அந்த திருவுருவங்களை அலங்கரித்திருக்கும் சோடினையும்தான். ஆண்டவனை அலங்கரிக்கும் அக்கலை சாத்துப்படி என்று அழைப்போம்.

இக்கலையை யேர்மனியில் துர்காதுரந்தரர் ஜெயந்திநாதக் குருக்களின் பிள்ளைகளான செல்வன் சங்கர்ஷண் சர்மா,சிவதனுஷ் சர்மா இவர்கள் அற்புதமாகச் செய்து வருகின்றார்கள்.

ஒரு தாய் தன் பிள்ளையை அழகு பார்ப்பாது போல் இவர்களும் அம்பாளை தம்குழந்தையாக அழகுபார்ப்பதில் தாயுமானவர் களாகத் திகழ்கின்றார்கள். இவர்கள் அம்பாளுக்கு சின்னஞ்சிறு பெண்போலே சிற்றாடை உடை உடுத்தி பின்னல் சடைபோட்டு அழகு மிளிர சாத்துப்படி செய்யுபோது, அன்று சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் சிந்துபைரவி ராகத்தில் பாடிய "சின்னஞ்சிறு பெண்போலே சிற்றாடை இடைஉடுத்தி" என்ற பாடல்தான் ஞாபகம் வருகின்றது.

அப்பாடலை ஒரு முறை பாருங்கள்....

**பல்லவி:**

**சின்னஞ்சிறு பெண்போலே சிற்றாடை இடைஉடுத்தி**
**சிவகங்கைக் குளத்தருகே ஸ்ரீதுர்கை சிரித்திருப்பாள்**
**(சின்னஞ்சிறு... சிரித்திருப்பாள்)**

**அனுபல்லவி:**

**பெண்அவளின் கண்அழகைப் பேசி முடியாது**
**பேரழகுக்கீடாக வேறொன்றும் கிடையாது**
**(சின்னஞ்சிறு... சிரித்திருப்பாள்)**

**சரணம்:**

**மின்னலைப்போல் மேனி அன்னை சிவகாமி**
**இன்பமெல்லாம் தருவாள் எண்ணம் எல்லாம் நிறைவாள்**
**பின்னல்சடை போட்டுப் பிச்சிப்பூச் சூடிடுவாள்**
**பித்தனுக்கு இணையாக நர்த்தனமும் ஆடிடுவாள்**
**(சின்னஞ்சிறு... சிரித்திருப்பாள்)**

இப்பாடலை அவரது மைத்துனர் உளுந் தூர்ப்பேட்டை சண்முகம் இயற்றியிருந்தார். இப்பாடலில் வரும் அழகிய வரிகள் போலவே அழகுற அம்மன் காட்சிதர அலங்காரமாச் சாத் துப்படி செய்திருந்தனர்.



அந்த இளம் கலைஞர்களை அன்றையதினம் பாராட்டி வெற்றிமணி சிவத்தமிழ் பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்களும் சிவத்தமிழ் உதவி ஆசிரியர் ஆன்மீகத்தென்றல் த.புவனேந்திரன் அவர்களும் பொன்னாடை போற்றிக் கௌரவித்தனர்.

படங்கள் **சிவத்தமிழுக்காக: தரன் வீடியோ அன் போட்டோ.**

# உருவ வழிபாடு அவசியமா? சுவாமி விவேகானந்தர் தந்த விளக்கம்!

**ஆன்மீகத்தென்றல் த.புவனேந்திரன்**



சுவாமி விவேகானந்தர் ஒருமுறை ஒரு கடைவீதிக்கருகில் தங்கியிருந்தார். மக்கள் பெரும் கூட்டமாக அவரிடம் வந்து பல கேள்விகளைக் கேட்டு அவரிடம் பலவற்றை அறிந்து கொண்டனர். பலர் சுவாமியின் பாடல்களைக் கேட்க வந்திருந்தனர். இந்து முஸ்லீம் எல்லோரும் அவருடைய உபதே சங்களைக் கேட்டு மயங்கி அமர்ந்திருந்ததை அவ்வழியே வந்த அந் நாட்டு மன்னரின் மந்திரி விவேகானந்தரிடம் கேட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் அவரை வியப்படையச் செய்தது, அதன் நிமித்தம் இதைப்பற்றி மந்திரி அரசனிடம் கூறியதுடன் அந்த சந்நியாசி பெரும் புலமை படைத்தவர் ஆங்கிலம் அறிந்தவர் என்றும் கூறினார்.

அரசரும் சுவாமியை சந்திக்க மிகவும் ஆவலாக இருந்தார். விவேகானந்தரும் அர சனை சந்தித்தார். அரசர் சுவாமியைபார்த்து, சுவாமிகளே! தாங்கள் பெரிய பண்டிதர் என்று கேள்விப்பட்டேன். நீங்கள் விரும்பினால் பெரிய செல்வந்தராக இருக்கலாம், இவைகளை விட்டு விட்டு ஏன் இப்படி சந்நியாசியாகப் பிச்சை எடுத்து வாழ்கிறீர்கள்? என்று அரசன் கேட்டார்.

சுவாமி அவர்கள் சிறிதும் தயக்கமின்றி தாங்களோ அரசர்! அரசியல் காரியங்களைக் கவனிக்காமல் நீங்கள் ஆங்கிலேயர்களுடன் சேர்ந்து காட்டில் மிருகங்களை வேட்டையாடித் கொண்டு ஏன் திரிகிறீர்கள்? என்று கேட்டார்.

அது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது என்றார் அரசன். விவேகானந்தரும் இந்த சந்நியாசி வாழ்க்கையும் எனக்குப் பேரானந்தத்தை அளிக்கிறது என்றார். இந்தத் துறவி சாதாரண மனிதர் அல்ல என்பதை அரசர் உணந்தார்.

சுவாமி நான் உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லாதவன், அதனால் என் உள்ளம் சாந்தியடையுமா? என்று அரசன் கேட்டபோது, மகாராஜா நீங்கள் என்னை ஏளனம் செய்கிறீர்கள் போலும்! என்று கம்பீரத்துடன் கேட்டார்.

சுவாமி விவேகானந்தர் அங்கு சுவரில் தொங்கிய ஒரு படத்தைக் காட்டி, என்ன இது மகாராஜாவின் படமா? என்று கேட்டார். ஆம் என்றார் மந்திரி, அதை எடுத்துத் தர முடியுமா? என்று சுவாமி விவேகானந்தர் கேட்டார்.

சுவரிலுள்ள படம் களற்றப்பட்டு கொடுக்கப் பட்டது. இங்குள்ளவர் யார் என்றா லும் இப் படத்தின் மீது காறித் துப்ப முன் வருவீர்களா? என்று சுவாமி விவேகானந்தர் கேட்டதும் எங்கும் பெரும் அமைதி நிலவியது.

சுவாமி மீண்டும் ஏன் இதில் மகாராஜா இல்லையே, இது வெறும் காகிதமும், மையும், அதன் மேல் உள்ள அச்சும்தானே என்றார்.

பின்பு இது மகாராஜாவின் உருவச் சின்னம், ஆதலால் நீங்கள் அதற்கு மரியாதை தருகிறீர்கள். அதுவே சரி, அதே போல் மரம், கல் ஆகியவற்றால் செய்யப்பட்ட தெய்வ வடிவங்கள் இறைவன் இல்லையென்றாலும் அவற்றைப் பார்த்ததும், பக்தர்களுக்கு இறைவனின் ஞாபகம் மனதில் உண்டாகிறது.

ஆகவே எல்லோரும் அந்த உருவங்களுக்கு மரியாதையும் தருகிறார்கள், பக்தி கொள் கிறார்கள் என்று சுவாமி விவேகானந்தர் கூறினார். ராஜா பணிவுடன் சுவாமி விவேகானந் தருக்குத் தன் வணக்கத்தையும் மரியாதையை யும் செலுத்தி நான் இதுவரை எண்ணியிருந்த பெரும் பிழை இன்று திருத்தப்பட்டது என்று கூறினார்.

# கடலுக்கடியில் இருந்த கோவில்



மாமல்லபுரம் செல்லும் பலருக்கு இந்த விடயம் தெரியாது. சென்னையில் இருந்து மாமல்லபுரம் செல்லும் கிழக்கு கடற்கரை சாலையில் சாளுவன்குப்பம் என்ற கிராமம், அப்போதைய பெயர் திருவிழிச்சில்.

இங்கே தான் (UNESCO) சின்னங்களில் ஒன்றான "புலிக்குகை" உள்ளது. இதற்கு நூறு மீட்டர் தள்ளி தான் இந்த இடமும் உள்ளது. இந்த இடத்திற்கு சென்ற போது ஏதோ ஒரு இனம் புரியாத மகிழ்ச்சி. இதே போன்ற பல கட்டிடங்கள் இன்று கடலுக்கு அடியில் தான் உள்ளது, ஆனால் இந்த ஒரே ஒரு கட்டிடம் மட்டும் தரையில் இருப்பது அதிர்ஷ்டம்.

எப்போதோ வந்த ஒரு சுனாமியால் உருத்தெரியாமல் அழிந்து மண்ணுக்குள் புதைந்து போன இது, அதே சுனாமியால் மீண்டும் வெளிவந்துள்ளது. 2004 சுனாமியால் நடந்த ஒரே நல்ல விடயம் இது மட்டுமே. இத்தனை ஆயிரம் வருடங்களாக யார் கண்ணிலும் படாமல் மண்ணுக்குள் இருந்த இந்த கட்டிடம் சுனாமியின் போது படத்தின் பின்புறமாக இருக்கும் கல்லில் இருந்த கல்வெட்டு வெளிப்பட்டதனால், அந்த இடம் தோண்டப்பட்டு கிடைத்தது.
படத்தில் நீங்கள் பார்ப்பது ஏதோ ஒரு இடிந்து போன சாதாரண கட்டிடம் அல்ல, தமிழகத்திலேயே இதுவரை கண்டுபிடிகப்பட்டுள்ள மிகப்பழமையான கோயிலில் முதல் இடம் பிடித்திருப்பது இது தான், அதாவது கிறிஸ்து பிறப்பிற்கு முன் கட்டப்பட்ட முருகன் கோவில்!. (Sangam period) (3rd century BC to the 3rd century AD ) அடித்தளத்தில் இருக்கும் செங்கல் கட்டுமானம் சங்க காலத்தை சேர்ந்தது, இந்த இடத்தை நேரில் சென்று பார்த்த போது ஆச்சர்யமாக இருந்தது, செங்கற்கள் ஒவ்வொன்றும் தற்போதைய அளவை விட இரண்டு மடங்கு பெரியதாக உள்ளது. இந்த சங்க கால கட்டிடம் சுனாமியால் அழிந்ததையொட்டி, இதில் பல்லவர்கள் இந்த செங்கல் கட்டுமானத்தை அப்படியே அடித்தளமாக வைத்து அதன் மீது கற்றளியை எழுப்பியுள்ளனர், அதன் பின்னர் சோழர் காலத்திலும் திருப்பணிகள் நடந்துள்ளது. பின்னர் அதுவும் ஒரு சுனாமியால் அழிந்து தற்போது அதே சங்ககால அடித்தளமே மீதம் உள்ளது.
அதை மிக சிறப்பாக தற்போது தோண்டி எடுக்கப்பட்டு பாதுகாத்து வருகின்றது தொல்லியல் துறை. இந்த செங்கற்கள் சங்க கால இடங்களான "பூம்புகார், உறையூர், மாங்குடி, அரிக்கமேடு" ஆகிய இடங்களில் கிடைக்கபெற்ற கற்களோடு ஒத்துப்போகின்றது.

தொடர்ச்சி 29ம் பக்கம்.

**Milin Impex**
Asiatische Lebensmittel Groß und Einzelhandel
**Tel:0231 45 96 17 / 28**
Mail:info@milinimpex.de
Westendorf Str.41
**44287 Dortmund**



Thuvaragan Nesapalan
rmb³ ist Partner der
Gothaer
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
**42115 Wuppertal**



**துர்க்கா பூஜா துரந்தரர்**
**சிவசாமிக்குருக்கள்**
**ஜெயந்திநாதக்குருக்கள்**
**Tel: 02304- 910 9445**
**0177 20 16 941**
**Robert koch Str.5**
**58239 Schwerte**

**Om Namaste**
*Indisch-Sri Lankische Restaurant*
**Tel:0231 530 644 74**
RHEINISCHE STR 55
44137 **DORTMUND**

**CEYLON IMBISS**
**இலங்கை உணவகம்**
**Tel:0231- 7252859**
**Annen Str.1**
**44137 Dortmund**

**KIOSK & ASIAN MARKT**
***Lebensmittal***
**Hagener Str.158**
**58285 Gevelsberg**
**Tel:02332 50 97 568**



திருக்கணித ஜோதிடம்
**சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்**
Kreuzeskirchstr. 40
**45127 Essen**
Tel: 0201-652450

**Sweet Chilli**
***Original Srilankisches & Indisches Restaurant***
**Tel: 0231 315 46 84**
**Rheinische str.60**
**44137 Dortmund**

**தரன் வீடியோ & போட்டோ**
**Tel: 0208 88 265 73- Handy:0177 24 77 449**

**வெற்றிமணி:** **02351 458862**
**0157 88 77 31 56**

## 28ம் பக்கத் தொடர்ச்சி..கடலுக்கடியில் கோவில்

”சிலப்பதிகாரத்தில்” கூறப்பட்டுள்ள ”குறவன் கூத்து” பற்றிய மண் சிற்பங்களும் இங்கு கிடைக்க பெற்றுள்ளது. கோவிலின் முன் புறத்தில் கல்லிலேயே செய்யப்பட்ட முருகனின் வேல் ஒன்று உள்ளது, சுடுமண்ணால் ஆன ஒரு நந்தி, ஒரு பெண்ணின் சிலை, விளக்குகள், சிவ லிங்கம், சோழர்களின் செப்பு காசு போன்ற ஏகப்பட்ட சங்க காலத்திய பொருட்கள் கிடைத்துள்ளது. இங்கு கிடைக்கப்பெற்ற இந்த ஒரு நந்தி தான் சுடுமண்ணால் ஆனது என்பதும் குறிப்பிடத்தக்கது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே எவ்வளவு நாகரிகமாக வாழ்ந்திருக்கிறோம் என்பது புரியும். அனைவரும் சென்று பார்க்க வேண்டிய இடம், நாம் நிற்கும் இதே இடத்தில் தானே இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் நம் இனத்தாரும் நின்று இதை கட்டியிருப்பார்கள் என்ற உணர்வோடு பாருங்கள், விடுமுறைக்கு தமிழகம் செல்பவர்கள் இதன் உண்மைத்தன்மையை அறிந்து எழுதுங்கள். சரியோ தவறோ வெளியில் தெரிந்தால்தான் உண்மை துலங்கும்.

# திருமுருகன் திருமண மண்டபம்




**இன்று யாழ்ப்பாணத்தில் புகழ் பெற்ற கல்யாண மண்டபம்**



**திருமுருகன்**
**திருமண மண்டபமும்,**
**பல்பொருள் அங்காடியும்**

**தாயகத்தில் வாழும் தமிழ்மக்களும், வெளிநாடுகளில் இருந்து வரும் எங்கள் உடன்பிறப்புக்களும், திருமண, மற்றும் மங்கல வைபவங்கள் அனைத்தையும் சிறப்பாக நடத்துவதற்கு ஓர் சிறந்த மண்டபம் 'திருமுருகன் கல்யாண மண்டபம்"**

**திருமுருகன் கல்யாண மண்டபம்**
**(கந்தசுவாமி கோயில் வடக்குவீதி)**
**கரந்தன் வீதி**
**நீர்வேலி.**
**யாழ்ப்பாணம்.**

**உரிமையாளர்:**
**திரு. சிவசுப்பிரமணியம் (செட்டியார்)**
**தொலைபேசி: 077 66 60 211**

**20 பக்கத் தொடர்ச்சி... முதுமை!**

உங்கள் உணர்ச்சிகளை தேவைகளை மனம் விட்டு வெளிப்படையாகக் கூறுங்கள். தேவை உணர்ந்து தானே செய்யும் நிலை இன்றைய இன்றைய சூழலில் குடும்பங்களில் இல்லை என்ற நிதர்சன மான உண்மையை ஏற்றுக் கொள்ளுங்கள்.

குடும்பத்தில் இளையவர்கள் பொறுப்பெடுத்துச் செய்ய அனுமதியுங்கள். உங்களது அறிவுரையும் வாழ்க்கைமுறையும் முரண்பாடு இன்றி இருக்கும் விதமாக உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்குங்கள்.

நீங்கள் எதிர்பார்க்கும் கவனம் உங்கள் குடும்ப உறுப்பினரிடம் கிடைக்கவில்லை என்றால். அவர்கள் உங்களை ஒதுக்குவதாக கற்பனை செய்து கொண்டு விலகி ஒதுங்காதீர்கள்.

உங்களது பிரச்சினையை பெரிதுபடுத்தினால் பிறரது பிரச்சினைகளை குறைத்து மதிப்பிட நேரிடும் சிறு விஷயங்களிலும் திருப்தி கொள்வதால் மனதளவில் இளமையாக இருப்பீர்கள்.

முதுமை ஒவ்வொரு வீட்டிற்கும் காவல் தெய்வம். மூத்தோர் சொல் முன்னால் கசக்கும் பினர் இனிக்கும். நல்லவற்றைச் சொல்லத் தயங்காதீர்கள். உங்கள் வாழ்க்கையை நீங்களே தவறவிட்டாலன்றி பிறரால் பறிக்க முடியாது.

வீணாகும் பொருள் களைக் கொண்டு அழகிய பயனுள்ள கைவினைப் பொருள்கள் செய்ய முடியும் போது நீங்கள் எப்படி பயனற்றுப்போக முடியும்.?

மகிழ்ச்சியற்ற போதெல்லாம் உங்களுக்கு கிடைக்காததைவிட கிடைத்ததைப் பற்றி அதிகம் நினைத்துப்பாருங்கள்.

சாவைப்பற்றிக் கவலைப்படுவதைவிட வாழ்வைப் பற்றி நினையுங்கள். இன்றைய நாளை மட்டும் நிறைவாகச் செலவிடுங்கள்.

உங்களுக்குப்பின் உங்கள் சந்ததியினரை நீங்கள் இன்றிச் செயற்பட இயலாதவராக்கி விடாதீர்கள். அதிகம் பேசுவதை விட அதிகம் கேட்பதற்கு முற்படுங்கள். மகிழ்வால் நிரம்பிய உங்கள் வாழ்க்கையை இவ்வுலகைவிட்டு மகிழ்வுடன் விடைபெறும் மனம் பெறப்பிராத்தியுங்கள். நீங்கள் யாருக்கும் பாரமல்ல. மாறாகப் பாலம் என மகிழ்ந்து ஈடுபாட்டுடன் வாழ்க்கையை எதிர் கொள்ளுங்கள்.

நீங்கள் வேர்கள் நாங்கள் விழுதுகள். வேர்களுக்கு விழுதுகள் என்றும் நன்றிக்கடன் பட்டதே!

People don't grow old ,only when they cease to grow,they become old. யாரும் முதியவர்கள் இல்லை. அவர்கள் வளர்வதை நிறுத்திக் கொள்ளும் போதுதான் வயதானவர்களா கிறார்கள். என எமர்சன் கூறியதை நினைவு கொள்ளங்கள்.

**நன்றி ஸ்ரீராமகிருஸ்ணவிஜயம் 2007 மலர்.**



# கலைகளுக்கு மதம் இல்லை!



தஞ்சைப் பெரும்கோவில்.படம்.சிவத்தமிழ்

'Sivaththamil" M.K.S. Sivakumaran Brinker Höhe 13 - 58507 Lüdenscheid - Germany